SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:04, Pages:56
NOVEMBER-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2024,
விலை ரூ.20/-



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம்

28-11-2024 முதல் 06-12-2024 வரை



04-10-2024 அன்று திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டுவஸ்திரங்களை சமர்ப்பித்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியினர்



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியருக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் திரு.ஆனம் ராம நாராயண ரெட்டி அவர்கள், தி.தி.தே.செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சி.எச்.வெங்கய்யா சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்





திருமலையில் வகுளமாதா சமையற்கூடத்தைத் திறந்து வைக்கும் மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு அவர்களுடன் ஆ.மா. அமைச்சர், திருப்பதி சட்டமன்ற உறுப்பினர், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர்





தி.தி.தே. 2025ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி, நாட்குறிப்பேடுகளை வெளியிடும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் அவர்கள் உடன் ஆ.மா. அமைச்சர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர் மற்றும் பிரமுகர்கள்





02-10-2024 அன்று திருவேங்கடவனை தரிசித்து ஸ்வாமி பிரசாதங்களைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு ஆ.மா. துணை முதல்வர் திரு. கே. பவன்கல்யாண் அவர்கள் உடன் திருப்பதி சட்ட மன்ற உறுப்பினர், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர்



அந்தவந்த இமே தே$_3$ஹா
நித்யஸ்யோக்தா: சரீரிண:।
அநாசிநோ‌ऽப்ரமேயஸ்ய
தஸ்மாத்$_3$யுத்$_4$வ ப$_4$ாரத॥

அழிவற்ற, விளக்க
முடியாத, நித்தியமான
ஜீவாத்மாவினுடைய
இந்த அனைத்து உடல்களும்
அழியக் கூடியவையாகக்
கூறப்பட்டுள்ளன. ஆகவே,
பரதகுலத்தோன்றலே!
அர்ஜுனா! நீ போர் புரிவாயாக.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–18*

*ஏமனி பொக$_3$டுது$_3$மே இகநினு*
*ஆமனி சொப$_3$கு$_3$ல அலமேல் மங்க$_3$ா*
*தெலிகன்னுல நீ தேடலே கத$_3$வே*
*வெலயக$_3$விபு$_4$னிகி வென்னெலலு*
*புலகல மொலகல பொது$_3$லிவி க$_3$த$_3$வே*
*பலமரு புவ்வுல பானுபுலு*
*திய்யனி நீமோவி தேனெலே கத$_3$வே*
*விய்யபு ரமணுனி விந்து$_3$லிவி*
*முய்யக மூசின மொலக நவ்வுக$_3$தெ$_3$*
*நெய்யபு கப்ரபு நெரிப$_3$ாக$_3$ாலு*
*கைவசமகு$_3$ நீ காகி$_3$லே க$_3$த$_3$வே*
*ஸ்ரீவேங்கடேஸ்வரு சிரி நக$_3$ரு*
*தாவு கொன்ன மீ தமகமுலே கதே$_3$*
*காவின்சின மீ கல்யாணமுலு*



வெண்ணிலவைப் போன்ற உன்னுடைய கருணை பொங்கும் கண்களல்லவோ உன் தலைவனுக்கு உற்சாகத்தைத் தரும். தோன்றி மறையும் உன்னுடைய புல்லரிப்பல்லவோ உன் தலைவனை அணைக்க நீ விரித்திடும் பூமெத்தையாகும். உன்னுடைய உதடுகளில் சொரியும் தித்திப்பான தேனல்லவோ தலைவனுக்கு நீ படைக்கும் சுவையான விருந்து. மலர்ந்தும் மலராத உன் புன்சிரிப்பல்லவோ உன்னுடைய தலைவனுக்கு நீ வழங்கும் மணம் மிகு தாம்பூலம். உன் கையரவணைப்பல்லவோ உன்னுடைய தலைவனான திருவேங்கடமுடையானின் அழியாச் செல்வம். இருவரின் நேசத்தில் வளரும் உங்களுடைய தெய்வீக தாம்பத்தியமே எங்களுக்கு சகல மங்களங்களையும் உண்டாக்குகின்றது.

*- அன்னமய்யா*

# திருச்சானூர்
# ஸ்ரீபத்மாவதித்தாயார் பிரம்மோத்ஸவம்

**28-11-2024 முதல்**
**06-12-2024 வரை**

**28-11-2024 வியாழக்கிழமை**
காலை : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**29-11-2024 வெள்ளிக்கிழமை**
காலை : பெரிய சேஷவாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**30-11-2024 சனிக்கிழமை**
காலை : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**01-12-2024 ஞாயிற்றுக்கிழமை**
காலை : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத் வாகனம்

**02-12-2024 திங்கட்கிழமை**
காலை : பல்லக்கு உத்ஸவம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**03-12-2024 செவ்வாய்க்கிழமை**
காலை : சர்வபூபால வாகனம்
மாலை : தங்கத்திருத்தேர்
இரவு : கருட சேவை

**04-12-2024 புதன் கிழமை**
காலை : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**05-12-2024 வியாழக்கிழமை**
காலை : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**06-12-2024 வெள்ளிக்கிழமை**
காலை : சக்கரஸ்நானம்,
பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2024

மலர் 04
இதழ் 04



## உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| பத்மசரோவரத்தில் பத்மாவதித் தாயார் - *ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் சுவாமிகள், திருமலை.* | 7 |
| அருளிச் செயலில் பிராட்டியின் வைபவம் - *திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர்.* | 11 |
| சென்னையில் சந்திர சஹோதரி - *நடுநாடான், சென்னை.* | 16 |
| தாசர்கள் தரிசித்த ஸ்ரீபத்மாவதி – ஸ்ரீநிவாசர் திருக்கல்யாணம் - *திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.* | 19 |
| ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் *திரு. எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.* | 22 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: களங்கம் போனது கன்னிகையும் கிடைத்தாள் - *திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.* | 24 |
| திருமலை தரிசனம் - *திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி.* | 31 |
| திருமகளின் திருவருள் - *திருமதி ஹேமா, திருப்பதி.* | 33 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்:மஹாலக்ஷ்மியின் மணவாளன் - *படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை.* | 34 |
| பழம்பெரும் திருவிழா கார்த்திகை தீபத்திருவிழா - *திரு. பனையபுரம் அதியமான், சென்னை.* | 38 |
| புருஷோத்தமனுக்கு புஷ்ப கைங்கர்யம் - *திருமதி பிரேமா வரதன், புதுடில்லி.* | 41 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - *டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 42 |
| தீக்ஷிதர் பார்வையில் திவ்ய நாயகி - *திருமதி எஸ்.திருவேணி, நங்கைநல்லூர்.* | 46 |
| ராசிபலன்கள் : நவம்பர் 2024 -*டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம்.* | 48 |
| சித்திரக்கதை : சாபமே வரம் | 52 |

### வாசகர்களுக்கு...

*இவ்விதழ் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் பல இடம் பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*-பிரதான ஆசிரியர்*

சிறப்பு ஆசிரியர் :
**திரு. J. சியாமளா ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. P. ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்.
பின்னட்டை : உபய தேவியருடன் ஸ்ரீகரியமாணிக்க ஸ்வாமி, நகரி.



# சௌபாக்யவதிக்கு பிரம்மோத்ஸவம்

உற்சவம் எனும் சொல்லின் பொருளை குறித்து ஆலோசித்தோமேயானால், உண்மையிலேயே நம் முன்னோர்கள் மக்கள் நலனிற்காக எவ்வளவு சிந்தித்து உள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. "சவம்" எனும் சொல்லோடு "உத்" எனும் சொல்லினை சேர்த்தால் "உற்சவம்" ஆகின்றது. "சவம்" எனும் சொல்லிற்கு "யக்ஞம், பழக்கவழக்கம்" என்று பொருள். அதாவது ஒவ்வொரு அதிஷ்டான தெய்வத்தினையும் மகிழ்விக்க, இகபர பலனை எதிர்பார்த்து சாஸ்திர முறைப்படி நடைபெறும் திருவிழாவாகும். ஆனால், இந்த நடைமுறையானது ஒரு குறிப்பிட்ட பலனை மட்டுமே அளிக்கவல்லது. அதன் பலன்களும் அந்நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்களுக்கு மட்டுமே கிடைத்திடும். சவம் எனும் சொல்லிற்கு முன்னதாக "உத்" எனும் சொல்லினை இணைத்திடும்போது திருவிழாவானது வரையறுக்கப்பட்ட நோக்கம் கொண்டதாகவும், சமுதாய நலனுக்கு பங்களிப்பதாகவும் அமைகின்றது. ஆதலால்தான் வால்மீகி முனிவர் இராமாயணத்தில் இராம பட்டாபிஷேகத்தினை விவரிக்கும்போது *"உத்ஸவச்ச மஹானா சீதயோத்யாயாம் ஜனாகுல"* என்று குறிப்பிட்டுள்ளதை அறியலாம்.

உத்ஸவங்கள் நடத்துவதினால் உன்னதமான பலனும், அதிஷ்டான தெய்வத்திற்குத் திருப்தியும் உண்டாகும். அதோடு சமுதாயப் பாகுபாட்டினையும் நீக்குகின்றது. உத்ஸவ நாட்களின் போது இறைவனின் உற்ஸவ மூர்த்திகளும் திருமாட வீதிகளில் எழுந்தருள்வர். திருக்கோயிலுக்குள் சென்று இறைவனை வழிபட முடியாத சூழ்நிலை இருந்தாலும், அத்தெய்வம் திருமாட வீதிகளில் எழுந்தருளும்போது தரிசித்தாலே போதும் முக்திப் பேறானது கிட்டிடும். திருமலையில் திருமலையப்ப ஸ்வாமி கருடவாகன சேவை, திருத்தேர் திருவீதி வலம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் யானை வாகன சேவை, பஞ்சமி தீர்த்தம் போன்ற உற்சவங்கள் நடைபெறுகின்ற நாட்களில் தரிசனம் செய்தால் அனைத்து செல்வங்களும், சௌபாக்கியங்களும் கிட்டிடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

புகழ் பெற்ற திருக்கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களின் போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்து தரிசனம் செய்வர். இதனால் பல்வேறு பகுதிகளின் பழக்கவழக்கங்கள் மற்றும் அவர்களின் பண்பாடுகளை அறிந்து கொள்வதற்கும், பரஸ்பர உறவுகளை வளர்ப்பதற்கும் வழி வகுக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக திருவிழாக்கள் என்பது நம் அறிவினை மேன்மேலும் வளர்ப்பதற்கான வழிகாட்டி மையமாகத் திகழ்கின்றது என்றே கூறலாம். சாஸ்திரப்படி நிகழ்ச்சிகள், உத்ஸவ மூர்த்திகளின் திருவீதிவலம் மட்டுமே அன்றி பல்வேறு கலைக்குழுவினர் தங்களின் கலைத்திறமையை வெளிப்படுத்தி ஆன்மீக அறிவினை உலகிற்குப் பறைசாற்றவும் முடிகின்றது.

காலங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் இந்த ஆன்மீக சக்தி அழிந்திடாமல் இருக்க ஊர்கள் தோறும் உள்ள திருக்கோயில்களிலும் திருவிழாக்களைக் கொண்டாடி பக்தர்களிடையே பாகுபாடில்லா உணர்வுகளை வளர்த்திட வேண்டும். அன்றையக் கால திருக்கோயில்கள் யாவும் ஆன்மீக ஒற்றுமையின் உறைவிடமாகவும், அன்றையத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தன. அதாவது திருமலை மற்றும் திருச்சானூர் திருத்தலங்களில் நடைபெறும் பிரம்மோத்ஸவங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இவ்வளவு மேன்மைகளைக் கொண்ட பிரம்மோத்ஸவம் உலகிற்கே சௌபாக்யவதி மகாலக்ஷ்மித் தாயாரின் திருஅவதாரமாக, திருச்சானூர் பத்ம சரோவரத்தில், பத்மத்தில் அவதரித்த பத்மாவதித் தாயாருக்கு இம்மாதம் கொடியேற்றத்துடன் திருவிழா துவங்குகிறது. இந்த பிரம்மோத்ஸவத் திருவிழாவில் நாமும் பங்கு கொண்டு பத்மாவதித் தாயாரின் இன்னருளைப் பெற விழைந்திடுவோம்.

***அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா!***
***நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே!***
***நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!***
***புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!***

அலர்மேல்மங்கைத் தாயாரை ஒரு கணமும் பிரியாமல் தன் திருமார்பில் வைத்துக் கொண்டிருப்பவன் திருவேங்கடமுடையான் என்று நம்மாழ்வார் போற்றுகின்றார். முதல் வரியிலேயே தாயாருக்கு ஏற்றம் கொடுத்தே ஆழ்வாரும் அருளிச் செய்கிறார்.

ஸ்ரீமஹாவிஷ்ணு திருமகளைத் தேடி திருவைகுந்தத்தை விடுத்து பூலோகத்தில் பாரத கண்டத்தில் வேங்கடாத்திரியில் திருவேங்கடமுடையானாக எழுந்தருளினார். மீண்டும் மஹா லக்ஷ்மித் தாயாரை சேர்ந்திட விழைந்தபோது, ஸ்வர்ணமுகி நதியின் வட கரையில், பத்ம சரோவரம் எனும் திருக்குளக்கரையில் 12 ஆண்டுகள் தவம் மேற்கொண்டு, பொற்றாமரை மலர்களால் அர்ச்சித்து வந்தால் மீண்டும் தாயார் அவதரிப்பார் என அசரீரி கூறியது.

எம்பெருமானும் அதன்படியே திருச்சானூரில் ஒரு திருக்குளத்தை நிர்மாணித்தார். குளக்கரையின் கிழக்குக் கரையில் மேற்குத் திருமுகமாய் சூரிய நாராயண மூர்த்தியை எழுந்தருளச் செய்தார். குளத்தினுள் பொற்றாமரை மலர்களை மலரச் செய்தார். பின்னர் மஹாலக்ஷ்மித்தாயார் அவதரித்திட எம்பெருமான் 12 ஆண்டுகள் தவம் மேற்கொண்டார். மஹாலக்ஷ்மித் தாயாரும் கார்த்திகை மாதம், சுக்லபக்ஷ பஞ்சமி அன்று உத்திராட திருநட்சத்திரத்தில், பத்ம சரோவரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட பொற்றாமரை மலரில் அவதரித்தாள். தாயார் அவதரித்த அச்சுபநாளே பஞ்சமி தீர்த்தம் எனக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயாரின் அவதார நன்னாளில் நிறைவுறும் வகையில் வருடம் தோறும் பாஞ்சராத்ர ஆகமப்படி பிரம்மோத்ஸவமும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

துவஜாரோஹணம் எனப்படும் கொடியேற்றத்துடன் பிரம்ம உத்ஸவம் துவங்கி ஒன்பது நாட்களும் காலையும் மாலையும் வெவ்வேறு அலங்காரங்களில், வெவ்வேறு வாகனங்களில் தாயாரும் திருமாடவீதிகளில் எழுந்தருளுவார். பிரம்மோத்ஸவத்தின் போது ஆழ்வார்கள் அருளிச்

*திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு "ஸப்தகிரி" வாசகர்களுக்காக...*

*ஸ்ரீஸ்ரீஸ்ரீ இளைய கோவில் கேள்வி அப்பன் கோவிந்த ராமானுஜ சின்ன ஜீயர் சுவாமிகள் அருளிய மங்களாசாசனம்...*



# பத்மசரோவரத்தில் பத்மாவதித்தாயார்



செய்த நாலாயிரத் திவ்ய பிரபந்த பாராயணமும் திருவீதி புறப்பாட்டில் சேவிக்கப்படும்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய கோவில் கேள்வி அப்பன் சடகோப ராமாநுஜ பெரிய ஜீயர் சுவாமிகள் தலைமையில் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் சேவிக்கப்படும். ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள் ''சாதித்தருளாய்'' என்று சொல்லி ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தொடங்கி வைப்பார். காலை மாலை இரு வேளைகளிலும் அருளிச்செயல் கோஷ்டி நடைபெறும். ஸ்ரீஸ்ரீஸ்ரீபெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீசின்ன ஜீயர் சுவாமிகள், ஏகாங்கி சுவாமிகள், ஆசார்ய புருஷர்கள் மற்றும் அத்யாபாக சுவாமிகள் பிரதி தினமும் வாகன மண்டபம் முன்பாக அன்றைய உத்ஸவத்தில், முதல் நாள் பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி முடிந்தவுடன் பெரியாழ்வார் திருமொழி 20, 30 பாசுரங்கள் சேவிப்பர்.

இதே போன்று இரண்டாம் நாள் பூதத்தாழ்வார் அருளிச் செய்த இரண்டாம் திருவந்தாதி முடிந்தவுடன் பெரியாழ்வார் திருவந்தாதி சேவிப்பர். மூன்றாம் நாள் பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாம் திருவந்தாதி முடிந்தவுடன் பெரியாழ்வார் திருமொழி சேவிப்பர். நான்காம் நாள் திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த நான்முகன் திருவந்தாதியும், பெரியாழ்வார் திருமொழியில் இருந்து சில பாசுரங்களும் சேவிப்பர்.

ஐந்தாம் நாள் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தமும், பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர். ஆறாம் நாள் நம்மாழ்வார் அருளிச் செய்த பெரிய திருவந்தாதியும், பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர். ஆறாம் நாள் இரவோடு பெரியாழ்வார் திருமொழி பூர்த்தி செய்யப்படும்.

ஏழாம் நாள் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி தொடங்கி , எட்டாம் நாள் காலை திருத்தேர் உத்ஸவத்தின் போது பெரிய திருமொழியில் ''மாற்றமுள'' வரை சேவிப்பர். திருத்தேர் நிலையில் வரும் வரை நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாசிரியம், திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் சேவிக்கப்படும். திருத்தேர் நிலையில் வந்த பிறகு பெரியாழ்வார் அருளிச் செய்த பெரியாழ்வார் திருமொழி ''தடவரவாய்'' மற்றும் பெரிய திருமொழி ''நந்த நரகத்து'' சாற்றுமுறை நடைபெறும். அதன் பிறகு பல்லாண்டு, இயல்சாத்து, மணவாள மாமுனிகள் வாழித் திருநாமத்தைச் சொல்லி பூர்த்தி செய்யப்படும்.

எட்டாம் நாள் இரவு குதிரை வாகனத்தின் போது ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழி என்கிற திவ்யப் பிரபந்தத்தைச் சேவிப்பர்.

ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவத்தில் காலை மாலை இரு வேளையும் நாலாயிரத் திவ்ய பிரபந்த பாராயணம் வாகன மண்டபம் முன்பாகத் தொடங்கி, கோபுர வாசலில் நிறைவு செய்யப்படும். பின்னர் திருக்கோயில் உள்ளே இராமாநுஜர் சன்னதியில் இயல்சாத்து சேவிக்கப்படும்.

ஒன்பதாம் நாள் காலை பஞ்சமி தீர்த்தம் அன்று தாயார் பல்லக்கில் எழுந்தருளுவார். அப்போது குலசேகராழ்வார் அருளிச் செய்த பெருமாள் திருமொழி சேவிப்பர். பின்னர் தாயார் முக மண்டபத்தில் எழுந்தருள்வார். அங்குத் தாயாருக்கு ஸ்ரீசூர்ணாபிஷேகம் நடைபெறும்.

அப்போது திருமழிசையாழ்வார் அருளிச் செய்த திருச்சந்த விருத்தம், தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளிச் செய்த திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரான், மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு சேவிக்கப்படும்.







**திருவேங்கடமுடையான் தனது பட்டத்து ராணியான ஸ்ரீபத்மாவதித் தாயாரின் அவதார நாளான பஞ்சமி தினத்தினை முன்னிட்டு திருமலையிலிருந்து பட்டுப்புடவை, திவ்யாபரணங்கள், மஞ்சள், குங்குமம் தாம்பூலத்துடன் லட்டு, வடை, அப்பம் போன்ற பலவிதமான பிரசாதங்களையும் அனுப்பி வைப்பார். இவற்றை தி.தி.தே. நிர்வாக அதிகாரிகளும், அர்ச்சகக் குழாமும் தங்களுடைய சிரமேற்கொண்டு திருமலையிலிருந்து நடந்தே படிகளில் இறங்கி வருவர். கீழ்த்திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் அதிகாரிகள் மேளதாளத்துடன் எதிர் கொண்டு கற்பூர ஆரத்தி காட்டி மரியாதை செய்திடுவர். மஞ்சள், பட்டு வஸ்த்திரம், பூமாலை, அப்பம் முதலான பிரசாதங்கள் யானையின் மீது அமர்ந்து ஏகாங்கி சுவாமிகளால் கொண்டு வரப்பட்டு, ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய கோவில் கேள்வி அப்பன் சடகோப ராமாநுஜ பெரிய ஜீயர் சுவாமிகள் முன்னிலையில் தாயாருக்குச் சமர்ப்பிக்கப்படும்.**



ஸ்ரீசூர்ணாபிஷேகம் முடிந்தவுடன் தாயார் தீர்த்தவாரி மண்டபத்திற்கு எழுந்தருளுவார். அப்போது திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் சேவிப்பர். அதன் பிறகு தீர்த்தவாரி மண்டபத்தில் தாயாருக்கு திருமஞ்சனம் நடைபெறும். திருமஞ்சனம் முடிந்தவுடன் தாயாருக்கு நீராட்டம் பதிகம் சேவிக்கப்படும்.

அப்போது ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை, தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி, நம்மாழ்வார் அருளிச் செய்த கோயில் திருவாய் மொழி, திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமாநுஜ நூற்றந்தாதி, மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தின மாலை, திருவாய் மொழி நூற்றந்தாதி சேவித்து சாற்றுமுறை நடைபெற்று திருப்பல்லாண்டு, மணவாள மாமுனிகள் வாழித்திருநாமம் சேவித்து நிறைவு செய்யப்படும். அதன் பின்பு திருமலை க்ரமப்படி தீர்த்தம் கோஷ்டி நடைபெறும்.

தாயார் பிரம்மோத்ஸவம் அத்யயன காலத்தி லும் வரும். அநத்யயன காலத்திலும் நடைபெறும்.

அநத்யயன காலத்தில் காலை மற்றும் மாலை இரண்டு வேளைகளிலும் பிரம்மோத்ஸவத்தில் மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தின மாலை பாசுரங்கள் சேவிப்பர்.

அத்யயன காலத்தைப் போலவே அருளிச் செயல் கோஷ்டி வாகன மண்டபத்தின் முன்பாக ஆரம்பித்து கோபுர வாசலில் நிறைவு செய்வர். அதன்பிறகு தாயார் திருக்கோயிலின் உள்ளே இராமாநுஜர் சன்னதியில் இயல்சாத்து சேவித்து நிறைவு செய்யப்படும்.

அநத்யயன காலத்தில் பஞ்சமி தீர்த்தம் அன்று அத்யயன காலம் போலவே அதே க்ரமத்தில் ஸ்ரீசூர்ண அபிஷேகத்தில் மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபேதச ரத்தின மாலை சேவிக்கப்பட்டு தீர்த்தவாரி மண்டபத்தில் நிறைவு செய்யப்படும். ஸ்ரீசூர்ண அபிஷேகத்தின் போது அர்ச்சக சுவாமிகள் பக்தர்க ளுக்கு தைலம் மற்றும் மஞ்சளையும், வழங்குவர். பின்னர் தீர்த்தவாரி முடிந்தவுடன் நாலாயிரம் தனியன், மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி சேவித்து சாற்று முறை நடைபெறும். திருப்பல்லாண்டு, மணவாள மாமுனிகள் வாழித்திருநாமம் சேவித்து நிறைவு செய்யப்படும்.

### பஞ்சமி தீர்த்தம்

திருவேங்கடமுடையான் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு அளித்த சீர்வரிசையை அர்ச்சகக் குழாம் அலிபிரிக்கு கொண்டு வருவர். அங்கிருந்து மேள தாளம்



முழங்கிட அலங்கரிக்கப்பட்ட யானை மீது வைத்து திருச்சானூருக்கு கொண்டு வருவர். திருச்சானூர் எல்லையில் உள்ள மஞ்சள்படி மண்டபத்தில் திருச்சானூர் திருக்கோயில் அதிகாரிகளும், ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் சுவாமிகள் பிரபந்த கோஷ்டியினர் வரவேற்று திருமாட வீதிகளில் பிரதக்ஷிணமாக எழுந்தருளப் பண்ணி ஸ்ரீபத்மாவதித் தாயாரின் திருக்கோயிலில் சமர்ப்பிப்பர். தாயாரும் திருவேங்கடமுடையான் கொடுத்து அனுப்பிய சீர்வரிசைகள் ஏற்றுக் கொண்டு சக்கரத்தாழ்வாரோடு தீர்த்தவாரி கண்டிட பத்ம சரோவரத்திற்கு எழுந்தருள்வார்.

அங்கே மங்கள வேளையில் பத்மாவதித் தாயாருக்கும், சக்கரத்தாழ்வாருக்கும் திருமஞ்சனம் நடைபெறும். திருமஞ்சனத்திற்குப் பின்னர் சக்கரத்தாழ்வார் பத்மசரோவரத்தில் தீர்த்தவாரி கண்டருளுவார்.

பஞ்சமி தீர்த்த நாளன்று ஸப்த நதிகளும் பத்ம சரோவரத்தில் பத்மாவதித் தாயாரைத் தரிசிப்பதற் காகக் கூடுவதாக ஐதீகம். எனவே இந்நாளில் பத்ம சரோவர தீர்த்தத்தில் நீராடினால் அனைத்து தீர்த்தங் களிலும் நீராடிய பலன் கிட்டும். அதோடு நாம் செய்த பாவங்கள் விலகிடும். நம் வாழ்வில் ஐச்வரியம் பெருகி, அனைத்து செல்வங்களையும் பெறலாம்.

**“சகல கல்யாண சமர்த்தி ரஸ்து**
**சுபமஸ்து நித்யம் நித்ய ஸ்ரீ நித்ய மங்களம்”**

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

**திருப்பவித்ரோத்ஸவம்**
**15-11-2024**



**கரி என்றால் யானை, யானைக்கு அபயம் அளித்து காப்பாற்றியதால் இங்குள்ள ஸ்வாமிக்கு ஸ்ரீகரிய மாணிக்க ஸ்வாமி எனும் பெயர் வந்தது. இந்த ஆலயத்தில் எம்பெருமானின் வலது புறம் ஸ்ரீதேவி தாயாரும், இடது புறம் பூதேவி தாயாரும் வீற்றிருக்கின்றனர். சாளுவ வம்சத்தினர் இந்த ஆலயத்தை கட்டினர். சாளுவர்களுக்குப் பிறகு கார்வேட்டி நகர மன்னர்கள் இந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தனர். இவர்களுக்குப் பிறகு திருமலை திருப்பதி மஹந்துக்கள் நிர்வகித்தனர். 07.10.1994 முதல் தி.தி.தேவஸ்தானத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.**



# அருளிச் செயலில் பிராட்டியின் வைபவம்









- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
அம்பத்தூர்,
99529 29685

பிராட்டிக்கு "ஸ்ரீ" என்று பெயர். "ஸ்ரீ" என்பதற்கு நான்கு வகையான பொருள்கள் உள்ளன. 1) எல்லோராலும் சேவிக்கப்படுபவள், 2) அனவரதமும் எம்பெருமானைப் பற்றியே இருப்பவள், 3) அடியார் விண்ணப்பங்களைச் செவிசாய்ப்பவள், 4) பலன் தருபவரான எம்பெருமானிடத்தில் தகுந்த சமயம் பார்த்து பரிந்து உரைப்பவள். உமக்கும் ஜீவனுக்கும் உண்டான உறவு ஒழிக்க ஒழியாதது. ஜீவன் நம்மைத் தேடி வந்த போது விட்டு விடக் கூடாது. ஜீவன் நம் குழந்தை. எனவே தண்டனை தரக் கூடாது என்று வந்தவர்கள் இடத்திலும், வராதவர்கள் இடத்திலும் கருணையைக் காட்டி அருள் புரிய வைப்பவள்.

இனி ஆழ்வார்கள் தரிசித்த திருமகளின் வைபவத்தை நாமும் தரிசிப்போம்.

### பொய்கை ஆழ்வார்

தன் முதல் திருவந்தாதி (பாசு.42) ***"திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்? திருமகள் மேல்"*** பெருமான் வேறு எந்தப் பொருளின் மீதும் சிறிதும் நெஞ்சத்தை செலுத்தாமல் பெரிய பிராட்டி ஒருத்தியின் மேலே ஆழங்கால் பட்டு இருக்கிறார் என்கிறார் ஆழ்வார். மேலும் திருமகளோடு கூடிய எம்பெருமான் திருக்கோவலூர் இட கழியில் வந்து நின்றதை ***"நீயும் திருமாளும் நின்றாயால் ... பூங்கோவல் இடைகழியே பற்றி இனி"*** (பாசு.86) என்று வியந்து பேசுகிறார்.

எம்பெருமான் திருமார்பில் திருமகள் எழுந்தருளியிருப்பதை ***"கார் வண்ணத்து ஐய! மலர்மகள் நின் ஆகத்தாள்"*** (பாசு.28) திருமகளோடு கூடி இருப்பது எம்பெருமானுக்குத் தனிச் சிறப்பு என்றும், ***"மங்கையான் பூமகளான்"*** (பாசு.74) என்றும் காட்டியுள்ளார். மேலும், திருமகளோடு கூடிய எம்பெருமானைப் பற்றுவதே சிறந்





# திருமகளுக்கு திருத்தேர் உத்ஸவம்

திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆலயத்தில் இரண்டு திருத்தேர்கள் உள்ளன. அவை தங்கம் மற்றும் மரத்தினாலான திருத்தேர்கள் ஆகும். கார்த்திகை மாதத்தில் நடைபெறும் பிரம்மோத்ஸ வத்தின் எட்டாம் நாள் காலையில் மரத்தினாலான திருத்தேர் உத்ஸவம் நடைபெறும்.

தங்கத்திருத்தேரில் தாயார் ஆண்டிற்கு மூன்று முறை எழுந்தருளுகிறாள். ஆண்டிற்கு ஒருமுறை வசந்தோத்ஸவத்தின் இறுதி நாளான வைகாசி மாதம் பௌர்ணமியன்றும், வரலட்சுமி விரதம் அன்றும், பிரம்மோத்ஸவத்தில் கருட வாகனம் அன்றும் தங்கத்திருத்தேரில் தாயார் கொலு வீற்றிருந்து நமக்கு அருளுகிறாள். மாதர் களின் மஹாராணியான தாயாரின் தங்கத் திருத்தேரினை மாதர்கள் மட்டும் வடம் பிடித்து இழுப்பது சிறப்பு அம்சமாக விளங்குகிறது.



தது என்பதை ***"தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு"*** (பாசு.67) எனத் தாயார் மீது தான் கொண்டுள்ள பக்தியைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

## பூதத்தாழ்வார்

தன் இரண்டாம் திருவந்தாதியில் ***"நிகரில்லாப் பைங்கமல மேந்திப் பணிந்தேன் பனிமலராள் அங்கம் வலங் கொண்டானடி"*** (பாசு.4) ஒப்பில்லாத பக்தியாகிய தாமரை மலரைத் தரித்துக் கொண்டு, தாமரை மலரில் பிறந்த பிராட்டியை வலமார்பினில் வைத்துக் கொண்டிருக்கும் பெருமாளுடைய திருவடிகளை வணங்கினேன் என்கிறார் ஆழ்வார்.

***"காணக்கழி காதல்.... திருமாலை நங்கள் திரு"*** (பாசு.56) திருமாலின் அழகிய திருமேனி தானே வந்து காட்டிக் கொடுப்பதற்கு முன் நம்முடைய திருமகள் தானே புருஷகாரம் செய்து காட்டிக் கொடுப்பாள் என்று திருமகளின் உயர்வைக் காட்டுகிறார்.

***"திருமங்கை நின்றருளும் தெய்வம் நாவாழ்த்தும் கருமம் கடைப்பிடிமின் கண்டீர்"*** (பாசு.57) பிராட்டி சம்பந்தத்தால் மேன்மை பெற்ற ஸ்ரீமந்நாராயணன், அவனை நாவினால் வாழ்த்தும் தொழிலையே உறுதியாகப் பற்ற வேண்டும் என்கிறார்.

***"வடிக்கோலவாள் நெடுங்கண் மாமலராள்.... கோலத்தாலில்லை குறை"*** (பாசு.82) அடியவர்களுக்காகப் புருஷகாரம் செய்யும் பிராட்டி நமக்காக ஒரு நொடிப் பொழுதும் அவனை விட்டுப் பிரியாமல் இருந்து நமக்கு அருள்புரிகிறார் என பிராட்டியின் மேன்மையைத் தெளிவுபடுத்துகிறார்.

## பேயாழ்வார்

தன் மூன்றாம் திருவந்தாதியில் பொய்கை ஆழ்வாரும், பூதத்தாழ்வாரும் ஏற்றிய விளக்கில் திருமகளைக் கண்ட பேயாழ்வார் ***"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்"*** (பாசு.1) தாயாருடைய பொன்னிறத் திருமேனியில் எம்பெருமான் திருமேனியைப் பொன்னிறமாகக் கண்டேன். திருமகளோடு கூடி இருப்பதாலே அவருக்குச் சிறப்பு மிக்க பிரகாச அழகு கூடி இருக்கிறது என்கிறார். ***"பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி மலிந்து திருவிருந்தமார்வன்"*** (பாசு.57) கரியமேகம்



**கொல்ஹாபூர் மஹாலக்ஷ்மிக்கு திருமலையப்பனின் சீர்வரிசை**

ஸ்ரீமஹாலக்ஷ்மி கொல்ஹாபூர் என்கிற அரக்கனை சம்ஹாரம் செய்தாள். அவ்வரக்கன் மரணிக்கும் தருவாயில் தாயாரிடம் இந்த ஊருக்குத் தன் பெயரை வைக்கும்படி வேண்டினான். ஸ்ரீமஹாலக்ஷ்மியும் அதற்கு சம்மதித்து அவன் பெயரைச் சூட்டி, அங்கேயே வாசம் செய்யலானாள். ஒவ்வொரு நவராத்ரி திருவிழாவின்போதும் திருமலையப்பன் (தி.தி.தே.) சார்பாக கொல்ஹாபூர் மஹாலக்ஷ்மித் தாயாருக்கு மஞ்சள், குங்குமம், பட்டு வஸ்திரங்களை சீராக சமர்ப்பிப்பர். புராணத் தின்படி, திருமலையப்பனின் வேண்டுகோளை ஏற்று, பத்மாவதித் தாயாராக அவதரித்தார் என்பது நாம் அறிந்ததே.




போன்ற பெருமாள் திருமேனியில் பொன்னிறம் உடைய திருமகள் உறைந்திருப்பது மேகத்தில் மின்னல் தோன்றுவது போல உள்ளது என்கிறார். சக்ராயுதத்தைக் கையில் ஏந்தியவனும், குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்தவனும், மலை போன்ற எம்பெருமாளுடன் எப்போதும் இருப்பவளும், ஆகாயத்தில் மின்னல் போன்று விளங்குபவளும், தேன் நிறைந்த தாமரைப் பூவில் வசிக்கும் திருமகளே நமக்கு என்றும் அடைக்கலம் என்பதை ***''சக்கரத்தான் தண் துழாய்... தேனமரும் பூ மேல் திரு''*** (பாசு.100) என்று கூறி நிறைவு செய்கிறார்.

### திருமழிசை ஆழ்வார்

***''வெய்யவாழி சங்க தண்டு வில்லும் வாளும் ஏந்துசீர்க் கைய! செய்ய போதில் மாதுசேரும் மார்ப! நாதனே!''*** (திருச். விரு. 97) என் எதிரிகளுக்காக கையில் சக்கரம், சங்கு, கதை, வில், வாள் ஏந்தி, செந்தாமரையில் பிறந்த திருமகளைத் திருமார்பில் தரித்த உன்னை அடையும் உபாயத்தை எனக்குக் கொடுத்திருக்கிறாய் என்று பெருமாளையும், பிராட்டியையும் துதிக்கிறார். ***''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு''*** (நான். திரு.53) திருமகளோடு கூடியிருப்பவன்தான் பரம் பொருள். மற்ற தேவர்கள் பரம் பொருள் அல்ல என்று பிராட்டியின் பெருமையைப் போற்றுகிறார்.

***''பொன்பாவை கேள்வா!''*** (நான். திரு.59) திருமகளின் சேர்த்தியால் கொழுந்துவிட்டு வளரும் ஒளியை உடையவன், அன்பின் வடிவாய் இருப்பவனுக்கு நான் அடிமைப்பட்டவன் என்கிறார் ஆழ்வார்.

### நம்மாழ்வார்

தம் திருவாய் மொழியில், ***''தருமவரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடைய பிரானார் இருமைவினை கடிவாரே''*** (1–6–9) பெறற்கரிய பயன்களைத் தரும் பொழுது பெருமாள் பிராட்டியோடு கூடி இருந்தே தருவான் என்கிறார்.

***''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா!''*** (6–10–10) அடியவர்களுக்குப் புருஷகாரம் புரிவதற்கே திருமகள் ஒரு நொடிப் பொழுதும் பெருமாளை விட்டுப் பிரியாமல் இருக்கிறாள் என்று பிராட்டியின் கருணையை மேன்மைப்படுத்துகிறார்.

***''நாளும் நின்றடு நம பழமை ... மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே''*** (பாசு.1–3–8). அதாவது

திருமகளோடுக் கூடிய எம்பெருமானை வணங்கினால் நம்முடைய வினைகள் அனைத்தும் மாய்ந்து போகும். எனவே திருமகளோடு கூடிய திருமாலை வணங்க வேண்டும் என்கிறார்.

*"கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே*
*சாலப்பல நாள் அடியேன் இன்னம் தளர்வேனோ?"*

(பாசு.6–9–3) திருமகளோடு கூடியுள்ள உன்னை அடைந்து அனுபவிக்காமல் மேலுள்ள காலம் அடியேன் துடிக்க வேண்டுமா எனக் கதறுகிறார். நிறைவில் தான் திருமகளோடு கூடிய எம்பெருமான் திருவடிகளை அடையப்பெற்று தன் துன்பமெல்லாம் தீரப் பெற்றதை *"ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே"* (பாசு.4–9–10) என்று திருமகளின் கருணையால் தான் அவன் பார்வை நம்மேல் பட்டதால் தான் தனக்கு பகவானின் திருவடி சம்பந்தம் கிடைத்த மகிழ்ச்சியைச் சொல்லிமாளாது என்று மேன்மேலும் போற்றுகிறார்.

## குலசேகர ஆழ்வார்

அவர் தமது பெருமாள் திருமொழியில்,

*"திருமாது வாழ் வாட்டமில் வனமாலை மார்வன்"*
*"திருமார்பன் சீராளும் வரை மார்பன்"*
*"தோடுலா மலர் மங்கை தோளிணைத்தோய்ந்ததுன்"*
*"அல்லிமாமலர் மங்கை நாதன்"*
*"அந்தாமரை பேதை மா மணவாளன்"*
*"அல்லி மலர் திருமங்கை கேள்வன்"*

என்ற பாசுரங்களில் சிறந்த தாமரை மலரில் பிறந்த பிராட்டிக்கு கணவனான பெருமாளை சிறந்த பக்தியோடு வணங்குபவர் தொண்டருக்குத் தொண்டர் ஆவர். இது உறுதி என பிராட்டியின் பெருமையைக் கூறுகிறார்.

## பெரியாழ்வார்

பெரியாழ்வார் பெருமாளுக்கு திருப்பல்லாண்டு பாடும்பொழுது *"வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு"* எனப் பிராட்டியைப் போற்றுகிறார். மேலும் தன் பெரியாழ்வார் திருமொழியில் *"போதமர் செல்வக் கொழுந்து புணர் திருவெள்ளறையானை"* (பாசு.2–8–10) என்று திருமகள் மணவாளருக்கு காப்பிடுகிறார்.

நிறைவில் விஷ்ணுவை தன் சித்தத்திலே வைத்துள்ள விஷ்ணு சித்தர் திருமகளுடன் கூடிய பெருமாளே தன் நெஞ்சில் எழுந்தருளி இருக்கிறார் என்பதை *"அரவிந்தப்பாவையும் தானும் அகம்படிவந்து புகுந்து... பள்ளி கொள்கின்ற பிரானைப் பரவுகின்றான் விட்டு சித்தன்"* (பாசு.5–2–10). தன் ஆன்மாவைக் காத்தருளியதற்காக பிராட்டியைப் போற்றுகின்றார்.

## தொண்டரடிப் பொடியாழ்வார்

*"திருமறுமார்வ! நின்னைச்சிந்தையுள் திகழ வைத்து"* (திருமாலை.40) பெரிய பிராட்டியாரையும், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையும் திருமார்பில் தரித்தவனை வணங்கினால் கொடிய பாவங்களின் பலனை அனுபவிக்க மாட்டார்கள். அவர்களுக்கு நன்மையே கிட்டும் என்கிறார்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையானின் அக்ஷர தீபிகை
ஸப்தகிரி



எழுத்து மலரால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனை தரிசிப்பதற்கும், அவரைச் சென்று அடைவதற்கும் எத்தனையோ வழிகள்.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப் பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி"யைப் படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமியின் திருவருளைப் பெற வையுங்கள்.



## திருச்சானூர் உறை அலர்மேல் மங்கை

*திருச்சானூர் உறை அலர்மேல் மங்கையே*
*திருநாள் நித்தம் காணும் மணிமாலையே*
*திருமால் நெஞ்சிலுறையும் பத்மாவதியே*
*தூமலர் ஏற்பாய் பிரம்மோற்சவ தேவியே!*

*கார்த்திகை மாதத்து புனித பத்மாசனியே*
*கலிக்கு பெரும் புண்ணியம் ஈர்த்தனையே*
*பிரமன் உவக்க உற்சவராய் நின்றனையே*
*புடைசூழ் வாகனங்களில் வந்தருள்வாயே!*

*கனகாம்பரம் கருவேப்பிலைத் துறந்தனையே*
*காதலின் ஊடலதை அரிக்கு விண்டனையே*
*குங்கும லட்சார்ச்சனையின் வேதநாயகியே*
*கும்பிட்டு வழிபடுவோரின் குறை தீர்ப்பாயே!*

*காசுமாலை பூண்டு கஜ வாகனமேறுவாயே*
*கல்பதரு வாகனமேறி கம்பீரமாய் வருவாயே*
*கனிவான மோகினியாய் கவர்ந்தருள்வாயே*
*கற்பகத்தருவாய் அன்பர்க்கு வரமளிப்பாயே!*

*முத்துப் பந்தல் வாகனமேறி உலா வருவாயே*
*மங்கல தீபாவளிக்கு வந்தனம் மொழிவாயே*
*மனங்கவர் ஹம்ஸ வாகனத்தில் எழுந்தருள்வாயே*
*மங்கா செல்வம் தடையின்றி வழங்குவாயே!*

*சேஷ வாகனத்தில் அமர்ந்துலாவும் தேவியே*
*சிம்மத்திற்கு உய்வளிக்கும் சிம்மவாகினியே*
*சர்வ பூபால வாகனத்திலமரும் வைஷ்ணவியே*
*சித்தத்தில் குடியிருப்பாய் கோமள வல்லியே!*

*ஏகபத்தினி விரதனை நாடிய வேதவல்லியே*
*ஏழுமலையான் உள்ளங்கவர் மங்கம்மாவே*
*எழிலான வசந்த உற்சவத்தின் கண்மணியே*
*ஏற்றமளிப்பாய் ஆகாச ராஜனின் செல்வியே!*

*உல்லாச ஊஞ்சலாடும் செங்கமல சீதையே*
*உற்சவராய் திருக்குள நீராடும் கோதையே*
*உழலும் உயிர்களை உய்விக்கும் உத்தமியே*
*ஊழ்வினைகள் அகற்றி உயர்வளிப்பாயே!*

*திரு. பு. சுவாமிநாதன், கோயம்புத்தூர், 90133 00706.*

### திருப்பாணாழ்வார்

அமலனாதிபிரானில் ***''திருவார மார்பதன்றோ அடியேனே ஆட் கொண்டதே''*** (பாசு.5) பிராட்டியாரையும், ஆரத்தையுடைய பெருமாளின் திருமார்பை நாம் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்தால் தாயின் நிழலில் ஒதுங்குவது போல நமக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகும் என்கிறார்.

### திருமங்கை ஆழ்வார்

திருமகள் அருளால் உலகை ஆளும் பேற்றினைப் பெறலாம் என்பதை ***''திருமாமகள் தன்னருளால் உலகில் தேர்மன்னராய் ஒலிமாகடல் சூழ் செழுநீர் உலகாண்டு திகழ்வார்களே''*** (பெரிய திரு.2–9–10) என்கிறார்.

திருமகள் திருவருளால் பரமபதம் ஆகிய பொன்னுலகை அடையலாம் என்பதை ***''பூவளரும் திருமகளாலருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர் தாமே''*** என்று திருமகளின் அருளினைப் போற்றுகிறார். திருமங்கை ஆழ்வார் திருமகளின் அழகை தன் பெரிய திருமடலில் ***''மன்னு மரகதக் குன்றின் மருங்கே ஓர்... குல மிரண்டாய் அன்ன திரு உருவம்''*** (பாசு.77–80). மரகதக் குன்றம் போன்ற எம்பெருமானின் அருகே இளம் வஞ்சிக் கொடி போன்று திருமகள் எழுந்தருளியுள்ளார் என்கிறார்.

ஆக பிராட்டியார் வைபவத்தை ஆழ்வார்களின் பாசுரத்தின் மூலம் அறிந்து அவள் பெருமையை உணர்ந்து, அவளுடைய புருஷகாரத்தினால் நல்வாழ்வு பெற பெருமாளைப் பற்ற வேண்டும். அதற்கு பிராட்டியின் கருணை வேண்டும் என்கிறார்கள் ஆழ்வார்கள். இவ்வளவு பெருமை மிக்க பிராட்டியை பெருமானோடு சேர்த்து வணங்கி அவர்கள் அருள் பெற்று உய்வோம்.

# சென்னையில் சந்திர சஹோதரி

உலக அளவிலும், இந்திய அளவிலும் புகழ் பெற்ற திருக்கோயிலாக விளங்குவது, திருமலை திருவேங்கடவன் திருக்கோயிலாகும். இத்திருக் கோயிலின் பெருமையை பக்தர்களுக்கு உணர்த் தும் விதமாக நாடெங்கிலும் திருமலை திருப்பதி தேவஸ்தான தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவ்வகையில் கடந்த 1992 ஆம் ஆண்டு சென்னையிலும் தகவல் மையம் அமைக்கப்பட் டது. இந்த மைய வளாகத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி – தாயார் சன்னதிகள் அமைந்துள்ளன. இந்நிலையில் இப்பழமை வாய்ந்த சென்னை மாநகரின், புதிய பெருமையாகவும், தமிழகத் திற்குப் புகழ் சேர்க்கும் வகையிலும், ஸ்ரீபத்மாவதித் தாயார் திருக்கோயில் எழுந்து உள்ளது.

**தல வரலாறு**

இத்திருக்கோயிலை எழுப்ப, கடந்த 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் நாளன்று சென்னையில் பூமி பூஜை நடத்தப்பட்டு, திருப்பணி களும் தொடங்கப்பட்டன.

திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் மீதுள்ள அபிமானத்தால் தாயார் திருக்கோயில் அமைக்க, ஆலயத்திற்கான சுமார் ஆறு கிரவுண்ட் நிலத்தை, திருமதி கிரிஜா பாண்டே, திரு.கே.பி. பாண்டே, குமாரி வசுந்தரா தேவி எனும் பழம்பெரும் நடிகை காஞ்சனா மற்றும் திரு. ரவி பூஷண் சர்மா ஆகியோர் திருமலை திருப்பதி தேவஸ் தானத்திடம் ஒப்படைத் தனர். அவர்களின் விருப் பப்படியே தேவஸ் தானம் சார்பில் இங்கு ஸ்ரீ ப த் ம ா வ தி த் தாயாருக்கு மிக அழகாக மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு திருக்கோயில் எழுப்பப் பட்டது.

**– நடுநாடான்**
**சென்னை.**

**மஹா கும்ப சம்ப்ரோக்ஷணம்**

கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று இத்திருக்கோயிலுக்கு மஹா கும்ப சம்ப்ரோக்ஷணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**ஆலய அமைப்பு**

இவ்வாலயம் மேற்கு நோக்கிய வாயிலைக் கொண்டு அமைந்துள்ளது. நுழைவு வாயிலில் சங்கு, சக்கரம் சின்னங்கள் காட்சி தர, மேல்புறத்தில் ஸ்ரீபத்மாவதித் தாயார் அமர்ந்தத் திருக்கோலத்தில் காட்சி தர, பெரிய திருவடி கருடனும், சிறிய திருவடி அனுமனும் வணங்கியபடி உள்ளனர். இதன் மேல் புறத்தில் சங்கு, சக்கரம் சின்னங்களும் தாங்கி நிற் கிறது. இந்த எளிய நுழைவாயிலைக் கடந்ததும் இடது புறம், "ஸ்ரீபத்மாவதி கலா மண்டபம்" அமைந்திருக்கிறது. வலது புறம் ஆலய அலுவலக அறைகள் ஒருங்கே அமைந்துள்ளன.

இதைக் கடந்ததும் எழிலான மூன்று நிலை ராஜ கோபுரம் ஐந்து கலசங்களைக் கொண்டு நம்மை வரவேற்கின்றது. இதன் கிழக்கு, மேற்கில் ஒவ்வொரு




**அமைவிடம்**

சென்னை, தியாகராய நகரில் ஜி.என். செட்டி ரோடு எனும் கோபதி நாராயண சாலையில் மேம்பாலத்தின் மேற்கில் அமைந்துள்ளது.









நிலைகளிலும் துவாரபாலகியர் இருவர் காவல் புரிய, தெற்கு வடக்கில் தாயாரின் அமர்ந்த திருக்கோலங்கள் காட்சி அளிக்கின்றன. உச்சியில் சிம்ம வாகனங்கள் அமைந்துள்ளன. இக்கோபுர வாயில், மஹாராஜ மண்டபம் என அழைக்கப்படுகின்றது. ராஜ கோபுரத்தின் இடது புறம் சிறிய புஷ்கரணி கட்டப்பட்டுள்ளது. கொடி மரம், பலி பீடம் கடந்ததும் கருவறை மஹா மண்டபமும்,மண்டப மேற்புற விளிம்பில் தாயாரின் பல்வேறு வடிவங்கள் சுதைச் சிற்பங்களாக அமைந்துள்ளன.

இதனைக் கடந்ததும், கருவறை முன்பாக பாலாகினி, வனமாலினி என துவாரபாலகியர் இருவர் தாயாருக்குக் காவல் புரிகின்றனர். கருவறையின் முக மண்டபத்தின் இடதுபுறம் ஸ்ரீவிஷ்வக்சேனர், ஸ்ரீகருடாழ்வார், ஸ்ரீராமாநுஜர் சிலை வடிவங்களில் காட்சி தருகின்றனர்.கருவறை முகமண்டபத்தில் உற்சவத் திருமேனிகளாக ஸ்ரீவிஷ்வக்சேனர், ஸ்ரீநிவாசப் பெருமாள், ஸ்ரீபத்மாவதித் தாயார், ஸ்ரீராமாநுஜர் காட்சி தருகின்றனர்.

தரிசனம் முடித்துப் பக்கவாட்டு வாயில் வழியே வந்ததும் கருங்கல்லிலாலான கருவறைக் கோயில் காட்சி தருகின்றது. மூன்று தளக் கருவறை விமானத்தில் சுதை வடிவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் ஒவ்வொரு நிலைகளிலும் ஸ்ரீபத்மாவதித் தாயாரின் மூன்று அமர்ந்த திருக்கோலங்கள் காட்சி அளிக்கின்றன. மேல்நிலையில் தாயாரின் இரு புறமும் சிம்ம வாகனம் காட்சி அளிக்கின்றன. நான்கு திசைகளிலும் இதே முறையில் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. வலச்சுற்றின் வடகிழக்கில் மடப்பள்ளி, தென் மேற்கில் பிரசாத விநியோகக் கௌண்டர் அமைந்துள்ளன.

## தலச்சிறப்பு

திருவேங்கடமுடையானுக்கு நாடெங்கிலும் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளதை அறிவோம். ஆனால் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு திருச்சானூர் போல, தனி ஆலயம் சென்னையில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும்.

மேலும், 108 திவ்ய தேசங்களில் ஒன்றான சென்னை திருவல்லிக்கேணியில், ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் கிழக்கு நோக்கிய திசையில் வீற்றிருக்க, தியாகராய நகரில், மேற்கு நோக்கியபடி ஸ்ரீபத்மாவதித் தாயார் எழுந்தருளி இருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

## தி.தி.தே. புத்தக வெளியீடு

திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு தி.தி.தே. புத்தகம் வெளியீட்டுத் துறையின் வாயிலாக தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

நூல் : பாகவதக் கதைகளில் பக்தியும் முக்தியும் (தமிழ்)
விலை : ரூ.320/-
ஆசிரியர்: முனைவர் பெரு.ஹரிகேசவ இராமாநுஜதாசர்

மேலும் விவரங்களுக்கு : தி.தி.தே. விற்பனை மற்றும் வேளியீடுகள், தி.தி.தே. அச்சக வளாகம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி 517 507.

தொலைபேசி எண். 0877- 2264209

### சேவைகள்

அர்ச்சனை ஆசீர்வசனம் கைங்கர்யம் திட்டத்தில், வஸ்த்திர சமர்ப்பணம், புஷ்ப அலங்காரம், நைவேத்தியம், ஒரு கால நைவேத்தியம் முதலானவை ஏற்கப்படுகின்றன.

### சர்வ தரிசன நேரங்கள்

காலை 7.30 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரை, நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை, மாலை 3.30 மணி முதல் 4.45 மணி வரை மற்றும் 5.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை.

### பூஜை காலங்கள்

சனிக்கிழமை முதல் வியாழக்கிழமை வரை காலை 5.00 மணிக்கு சுப்ரபாதம், 6.30 மணிக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை, வெள்ளிக்கிழமைகளில் அதிகாலையில் 4 மணி முதல் 4.30 மணி வரை சுப்ரபாதம், 5.10 மணிக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை, காலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை அபிஷேகம் நடைபெறும். மாலை 6.00 மணிக்கு லக்ஷ்மி பூஜை நடைபெறுகிறது. இதில் பெண்கள் கட்டணம் ஏதுமின்றி பங்கேற்றுப் பலன் பெறலாம். மேலும், வெள்ளிதோறும் காலை 6.00 மணிக்கு மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள் நடை பெறுகின்றன.

### நேரடி தரிசனம்

70 வயதிற்கு மேற்பட்டோர், மாற்றுத் திறனாளிகள், புதுமணத் தம்பதியினர், இரண்டு வயது குழந்தையோடு வரும் தம்பதியினர் என அனைவருக்கும் வரிசையில் நிற்காமல் நேரடி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

### வரம் தரும் தாயார்

பக்தர்களின் நியாயமான வேண்டுதல் நிறைவேற்றித் தரும் தாயாக ஸ்ரீபத்மாவதித் தாயார் விளங்குவதாக, வழிபட்டுச் செல்லும் பக்தர்கள் கூறுவது, தாயாரின் பெருமைகளை உணர்த்துவதாக உள்ளது.





# தாசர்கள் தரிசித்த ஸ்ரீபத்மாவதி–ஸ்ரீநிவாசர் திருக்கல்யாணம்

**– திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.**

திருமலை என்றவுடன் உடனே நினைவுக்கு வருவது “நித்ய கல்யாணம் பச்சை தோரணம்” என்பதுதான். திருக்கல்யாணம், பரிணய உத்ஸவம் என்றாலே நம் கண்முன் வந்து நிற்பது பத்மாவதி–ஸ்ரீநிவாசன் திருக்கல்யாணமே ஆகும். தெய்வத் திருமணங்கள் பல. அவற்றில் மிகவும் முக்கியமானவை ஸ்ரீபத்மாவதி கல்யாணம், ஸ்ரீருக்மிணி கல்யாணம், ஸ்ரீசீதா கல்யாணம், ஸ்ரீபார்வதி கல்யாணம், துளசிக் கல்யாணம், கோதா கல்யாணம்.

தாசர்கள் ஸ்ரீஹரியையும்–மஹாலக்ஷ்மித் தாயாரையும் புகழ்ந்து பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளனர். அவற்றில் ஒன்றான பத்மாவதி –ஸ்ரீநிவாச திருக்கல்யாணத்தை தத்தம் நடையில் போற்றி நமக்கு வரப்பிரசாதமாக வாதிராஜர் மற்றும் புரந்தரதாசர் தந்துள்ளனர். பத்மாவதி –ஸ்ரீநிவாச கல்யாண கீர்த்தனைகளை நித்தமும் பாராயணம் செய்யும் இடத்தில் மங்களகரமான சூழல் நிலவும். எந்த வீட்டில் பாராயணம் செய்கிறார்களோ அங்கு உள்ளவர்களுக்கு காலத்தே கல்யாணம் கைகூடுவதோடு பதினாறு பேறுகளைப் பெற்று வளமாக வாழ்வர்.

*“ஸ்ரீயரு யெல்லரு பன்னீரே, ஸ்ரீநிவாசன பாடிரே, ஞானகுருகள வந்திஸி முந்தே கதய பேளுவே...”*

எனத் துவங்கும் கீர்த்தனையை வாதி ராஜ தீர்த்தர் பாடி, அதனை ஹயவதனான (ஹயக்ரீவப் பெருமாள்) ஸ்ரீநிவாசருக்கு சமர்ப்பிக்கின்றார்.

*“வைகுண்ட்ட பதி தானு வைகுண்டவனே, பிட்டு வேங்கடாத்ரி ஹோகி ஸ்ரீகாந்த நிந்த...”*

வைகுண்ட வாசன் வைகுண்டத்தை விடுத்து வந்து இந்த வேங்கடாத்ரியில் வேங்கடாத்ரியாக ஸ்ரீநிவாசன் நின்றார் என்ற கீர்த்தனையை ஆரம்பித்து பத்மாவதி –ஸ்ரீநிவாச திருக்கல்யாணத்தை அழகாக வருணிக்கின்றார்.

## பத்மாவதி - ஸ்ரீநிவாசர் திருக்கல்யாணம்

*"ஸ்ரீயரு யெல்லு பன்னிரே..."* என்ற பாடலில் முனிவர்கள் பலர் கங்கை நதித்தீரத்தில் ஹோமம் செய்துகொண்டிருந்தனர். அங்கே "நாராயணா... நாராயணா..." என்ற திருநாமத்தைத் துதித்துக் கொண்டே வந்த நாரதர் முனிவர்களை நோக்கி ஹோமம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. இந்த ஹோமத்தின் பலனை யாருக்குச் சமர்ப்பிக்கப் போகிறீர்கள் என வினவினார். அதற்கு பிருகு முனிவர் அதை யாருக்குச் சமர்ப்பிப்பது என்பதை முடிவு செய்யலாம் என மற்ற முனிவர்களு டன் புறப்பட்டு கைலாயத்திற்கு வந்தார். அங்கு பார்வதி பரமேஸ்வரன் ஆனந்தத் தாண்டவத்தில் மூழ்கியிருந்து முனிவர்களை கவனிக்கவில்லை. அதனால் கோபம் கொண்ட முனிவர் சிவனுக்கு சாபம் அளித்துவிட்டு வைகுண்டத்திற்குச் சென்றார்.

அங்கு யோக நித்திரையில் இருந்த மஹாவிஷ்ணு, தன்னை உபசரிக்காததால் முனிவர் விஷ்ணுவின் திருமார்பில் எட்டி உதைத்தார். ஆனால் மஹாவிஷ்ணு புன்னகையுடன் ஒரு தங்கத் திருத்தட்டில் மகரிஷியின் பாதங்களுக்கு பாதசேவை செய்தார். அதனைக் கண்டு மகிழ்ந்த முனிவர் மீண்டும் சபைக்குத் திரும்பி வந்து ஸ்ரீநிவாசனைப் பலவாறு புகழ்ந்தார்.

தான் வசிக்கும் திருமார்பில் முனிவர் எட்டி உதைத்ததால் கோபமுற்ற மஹாலக்ஷ்மித் தாயார் கொல்ஹாபுரத்திற்குச் சென்றுவிட்டாள்.

தாயார் புறப்பட்ட மறுநொடியே ஸ்ரீயபதியான ஸ்ரீநிவாசரும் பூலோகத்திற்கு வந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒரு புற்றில் இருந்து திருமகளுக்காகத் தவமியற்றினார்.

ஸ்ரீநிவாசரின் பசியைப் போக்கும் எண்ணத்தில் பிரம்மா பசுவாகவும், சிவன் கன்றாகவும் வந்து ஸ்ரீநிவாசனைச் சுற்றி வளர்ந்துள்ள புற்றில் பாலைச் சுரந்தனர். கன்றுடன் பசுவைக் கண்டு மாடு மேய்ப்பவள் அவற்றை அன்புடன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று நடந்தவற்றையெல்லாம் தன் கணவனிடம் கூறினாள்.

ஒருமுறை பசுவானது பால் சுரக்காததால், மாடுமேய்ப்பவன் அதற்கான காரணமறிய அதன் பின்னால் செல்ல, அப்பசுவானது ஒரு புற்றில் பால் சுரப்பதைக்கண்டு அதனை அடிக்க கை ஓங்கியவுடன் ஸ்ரீநிவாசர் புற்றிலிருந்து வெளியே வந்து தன்



### பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம்

**பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் வருடந்தோறும் வைகாசி மாதம் சுக்லபக்ஷ தசமி அன்று நிறைவு அடையும் விதமாக நடைபெறும். அச்சமயம் திருமலையப்ப ஸ்வாமி யானை, குதிரை, கருட வாகனத்திலும், தேவியர் இருவரும் ஒரே பல்லக்கிலும் நாராயணகிரி உத்யானவனத்தை அடைவர். அங்கு திருமணச் சடங்குகள் வேத கோஷங்கள் முழங்க நடைபெறும்.**

**மூன்று நாட்களிலும் நான்கு வேதங்களிலிருந்தும் திவ்யமான மந்திரங்களை வேத விற்பன்னர்கள் முழங்கு வர். மங்கள வாத்யங்கள், கர்நாடக சங்கீத கானம், இசை வாத்யக் கச்சேரிகள், ஹரிகதைகள், பலவிதமான நடனங்கள் எனப் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.**

**ஒவ்வொரு நாளும் தெய்வீக தம்பதியரின் கொலுவும், ஊஞ்சல் சேவையும் கண்டு தெய்வீகத் தம்பதிகளின் திவ்ய அருளைப் பெற்றிடலாம்.**



## 2024, டிசம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

02)திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் தங்கத்திருத்தேர், யானை வாகனம்.

06) திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பஞ்சமி தீர்த்தம்.

07) திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் புஷ்ப யாகம்.

11) ஸ்ரீகீதா ஜெயந்தி, 12) சக்கர தீர்த்த முக்கோட்டி.

13) ஸ்ரீஅனுமத் விரதம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம், திருமங்கையாழ்வார் சாத்துமுறை.

14) திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம்.

15) திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம், கபில தீர்த்த முக்கோட்டி. 16) மார்கழி மாதம் ஆரம்பம்.

29) தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திரம்

30) திருமலையப்ப ஸ்வாமி அத்யயனோத்ஸவம் ஆரம்பம்.

தலையில் அந்த அடியை வாங்கிக் கொண்டார். கோமாதாவை அடித்த பாவத்திற்காக மாடு மேய்ப்பவன் பிசாசாக ஆனான்.

சேஷாசலத்தில் தான் தங்குவதற்கு ஸ்ரீவராஹ ஸ்வாமியிடம் ஸ்ரீநிவாசர் இடம் கேட்டார். வராஹ ஸ்வாமியும் இடத்தை அளித்தார். அதனால் தனக்கு இடம் அளித்த ஸ்ரீவராஹருக்கே முதல் பூஜை என்று கூறினார்.

அதன் பின்னர் அழகாக தன்னை அலங்கரித்துக் கொண்டு கமலநாபனான ஸ்ரீநிவாசர் ஒரு குதிரை மேல் ஏறி வேட்டைக்காக நாராயணபுரத்திற்குச் சென்றார். அங்கு பத்மாவதி தன் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார். ஸ்ரீநிவாசர் தன் தாயான வகுளமாதாவிடம் நடந்ததைக் கூறி விட்டு, குறத்தி வேடம் தறித்துக் கொண்டு தரணி தேவியான பத்மாவதி அரண்மனைக்குச் சென்று, குறி சொல்லி திருக்கல்யாணத்திற்கு ஒப்புதல் பெற்றார்.

பிரகஸ்பதியை அழைத்து திருமணத்திற்கு லக்னத்தைக் குறித்து, சுகமகரிஷியை அழைத்து திருமணப் பத்திரிக்கை எழுதினார். இஷ்ட தெய்வங்களுக்குப் பூஜைகள் செய்து, அஷ்டவர்க்கம் செய்து, அழகிய மணி மண்டபத்தில் கனக பூஷனான சேஷகிரி வாசன் ஸ்ரீநிவாசன் ஏறி அமர்ந்த பின்னர், ஸ்ரீபத்மாவதி தேவி சர்வாலங்கார பூஷிதையாக மண்டபத்தில் தன் திருப்பாதங்களைப் பதித்து எழுந்தருளினாள். கமலநாபன்–காந்தி மணிக்கு திருக்கல்யாண கங்கணங்கள் கட்டிய பின் திருக்கல்யாணமும் முக்கோடி தேவர்கள் முன்னிலையில் இனிதே நடைபெற்றது.

லட்ச தவறுகள், கோடி தவறுகள் செய்து இருந்தாலும் கருடவாகனனான, குசுமநாபனான திருவேங்கடவன் எண்ணிலடங்காத வரங்களைக் கொடுத்தருளுவார். பக்தியுடன் இதைத் துதிப்பவர்களுக்கு முக்தியை அளிக்கும் திருவேங்கடவன்–பத்மாவதிக்கு மங்களம் என்பதை,

*“லக்ஷ தப்பு என்னலுண்டு பக்ஷிவாஹண சலஹென்ன*
*கோடிதப்பு என்னலுண்டு குசுமநாப சலஹென்ன*
*சங்கேயில்லத வரவ கொடுவ வேங்கடேச சலஹென்ன*
*பக்தியிந்த ஹேளகேளிதவரிகே முக்தி கொடுவ ஹயவதனனு*
*ஜெய ஜெய ஸ்ரீநிவாசநிகே ஜெய ஜெய பத்மாவதிகே*
*ஒலிதந்தஹ ஸ்ரீஹரிகே நித்ய சுபமங்கள*
*சேஷாத்ரி கிரிவாசா ஸ்ரீதேவி அரசகே*
*கல்யாணமூர்த்திகே நித்ய ஜெயமங்கள*
*கல்யாணமூர்த்திகே நித்ய சுபமங்கள”*

என்று கல்யாண மூர்த்தியான ஸ்ரீநிவாசரை ஸ்ரீவாதிராஜ தீர்த்தர் துதிக்கின்றார்.




**– திரு.எம். அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி, 97503 33265**

தாயாருக்குப் பிறப்பினால் பெருமை, இருப்பினால் பெருமை, இயல்பினால் பெருமை.

### பிறப்பினால் பெருமை

பாற்கடலில் அவதாரம் செய்தார் மஹாலக்ஷ்மி. அமிர்தத்தைப் பெறுவதற்காக பெருமாள் பாற்கடலைக் கடையச் செய்தார் என்று சொல்வதை விட மஹாலக்ஷ்மிக்காகவே அவர் பாற்கடலைக் கடையச் செய்தார் என்று சொல்வதே பொருந்தும். அமிர்தம் சக்கை மாதிரி; தாயார் தான் சாரம்; பாற்கடலிலிருந்து தாயார் தோன்றினார். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவர் திருமாலின் திருமார்பில் போய் நிலையாகத் தங்கி விட்டார்.

தாயாரின் பிறப்பின் பெருமை அத்தகையது. ஜனகர் யாகத்திற்காக நிலத்தை உழுத பொழுது நிலத்தில் கிடைத்தவளே தாயார் சீதாப்பிராட்டி. பெருமாளுடைய அவதாரத்தைக் காட்டிலும் தாயாருடைய அவதாரம் மிகச் சிறந்ததாகும். பெருமாளாவது சில சமயம் தேவகி, கௌசல்யா இவர்களின் பிரார்த்தனைக்கிணங்க அவர்களின் கர்ப்பத்தில் வாசம் செய்தார். ஆனால் தாயார் அப்படி இல்லை. அயோனிஜையாகப் பிறந்தாள். அது தான் தாயாரின் மிகப் பெரிய ஏற்றம். பிருகு மகரிஷி பிரார்த்தித்தார் என்று குடந்தையில் பொற்றாமரைக் குளத்தில் அவதரித்தார். அதே மாதிரி காஞ்சியிலும் பொற்றாமரைக் குளத்தில் பெருந்தேவித் தாயாராக, திருத்தண்கா என்ற தூப்புலிலும் லக்ஷ்மி சரஸ் என்ற திருக்குளத்தில் அவதாரம் செய்தார். பாற்கடல், திருக்குளம், யாக பூமி என மூன்றிடங்களில் தாயார் அவதாரம் செய்துள்ளார்.

### இருப்பினால் பெருமை

இராவணன் மாரீசனிடம் சீதையைக் களவாட உதவி புரிய வேண்டும் என்று கேட்கிறான். அப்பொழுது மாரீசன் சொல்கிறான். நீ ஸ்ரீராமனை குறைவாக எடைபோடாதே. அவனுடன் தாயாரான சீதா தேவி இருக்கிறாள்.

அவளின் சக்தி கணக்கில் அடங்காது. அவர்களுக்கு நடுவில் வந்தால் நீ பொசுங்கிப் போய் விடுவாய் என்று கூறுகிறான். அப்பேற்பட்ட பெருமை தாயாருக்கு உண்டு. எந்த இடத்தில் துளசி காடுகள், தாமரைக் காடுகள், வைஷ்ணவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் பெருமாள் வசிக்கிறார். தாயாரோ பெருமாளின் திருமார்பில் வசிக்கிறார். தன்னுடைய நிரந்தர வாசஸ்தலமாக எம்பெருமானின் திருமார்பை ஏற்றுக் கொண்டார் மஹாலக்ஷ்மி. தாயாரின் மனத்தில் பெருமாள் என்றும் இருந்து கொண்டிருக்கிறார். அதனால் இருவரும் என்றும் பிரியாமல் இருக்கிறார்கள்.

### இயல்பினால் பெருமை

மூன்று லோகங்களுக்கும் அதிபதி தாயார். ஸ்ரீவைகுண்டமும் தாயாரின் ஐச்வர்யம். அத்தனை திருக்கல்யாண குணங்களும் கொண்டு திகழ்பவள் மஹாலக்ஷ்மித் தாயார். அவளின் திருக்கண்கள் கருணையே உருவெனக் கொண்டவை. அவளின் திருமுகம் எப்போதும் சாந்தமாகவே இருக்கும்.

அகில உலகத்திற்கும் அன்னையான அவள் நல்லுள்ளம் கொண்டவர்களின் இல்லங்களுக்குச்

**திருச்சானூரில் சூரிய பகவான்**

**பத்மஸரோவர புஷ்கரணியின் கிழக்குக் கரையில் சூரிய பகவானின் திருக்கோயில் அமைந்துள்ளது. இம்மூர்த்தியைத் திருமலையப்பன் லக்ஷ்மித் தாயாருக்காக தவம் புரியும் முன்பு ஸ்தாபித்தார். ஏப்ரல் 2, 1866, அன்று ஹதிராம்ஜி மட நிர்வாகிகளால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது. இக்கோயிலில் வைகானச ஆகம சாஸ்திரத்தின்படி பூஜைகள் நடைபெறுகின்றது. பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும், ஹஸ்த நட்சத்திரத்திலும், ரத சப்தமி நாளிலும் இக்கோயிலில் சிறப்பு பூஜைகள் நடைபெறும்.**



செல்வதையே விரும்புகின்றாள். எந்த வீட்டில், கெட்ட வார்த்தைகள் பேசப்படுகிறதோ அங்கே மஹாலக்ஷ்மி வருவதே இல்லை என்கிறது சாஸ்திரம். "பொண்ணு மஹாலக்ஷ்மி மாதிரி இருக்காப்பா" என்று சொல்வர். இதற்குப் பொருள் மஹாலக்ஷ்மி போல அழகுற அமைந்திருக்கிறாள் என்பது மட்டுமல்ல, மஹாலக்ஷ்மியிடம் இருக்கிற நற்குணங்கள் யாவும் அவளுள் பொதிந்து இருக்கின்றன என்று பொருள்.

மஹாலக்ஷ்மித் தாயார் பத்மாசனத்தில் அமர்ந்து சங்கு, சக்கரம், கதை இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியிருப்பவள், கருட வாகனத்தில் ஆரோகணித்து பரப்ரம்மத்தின் வடிவாகத் திகழ்பவள். பட்டத்து ராணியாக விளங்குபவள், பெரும் பாவங்களைத் தொலைப்பவள், யோக நிலையில் தோன்றி யோக வடிவாகத் திகழ்பவள், அறிவும் சிந்தனையும் சேர்ந்து எய்தும் தெய்வீக வெற்றியினை அருள்பவள், பெருமாளை அடைய நமக்காக புருஷாகாரம் செய்பவள், மந்திரங்களின் வடிவாகத் திகழ்ந்து உயர்ந்த ஞானத்தின் இருப்பிடமாக விளங்குபவள், அனைத்து வரங்களையும் அளிப்பவள், எல்லாத் தீமைகளுக்கும் பயங்கரியாக விளங்கி எல்லா துக்கங்களையும் தீர்ப்பவள், இப்படி பெரிய பிராட்டிக்கு பிறப்பினால் பெருமை, இருப்பினால் பெருமை, இயல்பினால் பெருமை என்பதை அறியலாம்.

## ஸப்தகிரி செப்டம்பர் 2024 விடைகள்

1. கேரளம்.
2. தொண்டைமான் சக்கரவர்த்தி.
3. நம்பாடுவான்.
4. நற்றிணை.
5. சுமந்திரர்.
6. பூதத்தாழ்வார்.
7. வாமனர்.
8. நம்மாழ்வார்.
9. இராஜேந்திர சோழன்.
10. திருமங்கையாழ்வார்.
11. முக்குறுணி பிள்ளையார்.
12. ஸ்ரீகிருஷ்ணர்.
13. சதுர்த்தி.
14. திருவோணம்.
15. ஆதிசேஷன்.

வினாடி வினா

## போட்டி எண். 26

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஆ.ஜீவா, திருக்கோவலூர், விழுப்புரம் மாவட்டம்.
2. செல்வி சி.தேவரதி, சத்திய மங்கலம், ஈரோடு மாவட்டம்..
3. செல்வன் எம்.வேதாந்த், அடையார், சென்னை.

*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# களங்கம் போனது கன்னிகையும் கிடைத்தாள்



**– திரு.எஸ்.ஸ்ரீதுரை,**
**காஞ்சிபுரம்,**
**9486139685**

புராணவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் ராதை உள்ளிட்ட ஆயர்குலப் பெண்களின் உள்ளம் கவர்ந்த நாயகன் ஸ்ரீகண்ணபிரான். மதுராவிலிருந்து துவாரகைக்கு வந்த பின்பு விதர்ப்ப தேசத்து இளவரசியும், ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரின் அம்சமான ஸ்ரீருக்மிணிப்பிராட்டியை மணந்து கொண்டார். அதன் பின்பு ஜாம்பவானின் திருமகளான ஜாம்பவதி, ஸத்ராஜித் யாதவனின் மகளும் பூமாதேவியின் அம்சமான சத்தியபாமாவைக் கரம் பிடித்தார்.

பின்னர் சூரிய தேவனின் மகளான காளிந்தி, அவந்தி நாட்டு இளவரசியும் தம் அத்தை ராஜாதிதேவியின் மகளுமாகிய மித்திரவிந்தையையும் அவர் மணந்து கொண்டார்.

அதன் பின்னர் ஸ்ரீகிருஷ்ணபகவான் கோசல நாட்டு நக்னஜித் விதித்த நிபந்தனையின்படி ஏழு காளைகளை அடக்கி அவ்வரசனின் மகளான ஸத்யா எனும் நப்பின்னையைத் திருமணம் செய்து கொண்டார். மேலும் தம்முடைய இன்னோர் அத்தை சுருதகீர்த்தியின் மகளும், கேகேய தேசத்து இளவரசியும் ஆன பத்ரை, மத்ரதேசத்து இளவரசி லக்ஷ்மணா ஆகியோரையும் மணந்தார்.

இவர்களுள், சத்தியபாமாவை ஸ்ரீகிருஷ்ண பகவான் மணப்பதற்கு அவர் மீது சுமத்தப்பட்ட அவப்பெயரே காரணமாயிற்று.

ஸ்ரீகிருஷ்ணரால் மதுராவிலிருந்து துவாரகைக்கு அழைத்து வரப்பட்ட யாதவர்களில் ஒருவராகிய ஸத்ராஜித் நீண்டநாட்களாக சூரிய பகவானை உபாசனை செய்து வந்தார். அவருடைய பக்தியைக் கண்டு மனம் மகிழ்ந்த சூரிய பகவான் மிகவும் பிரகாசமான சியமந்தகமணி என்ற ரத்தினத்தை அவருக்குப் பரிசாக வழங்கினார்.

சூரிய பகவான் அருளிய சியமந்தக மணியை ஸத்ராஜித் தமது கழுத்தில் அணிந்து கொண்டு துவாரகா நகரத்து வீதிகளில் ஊர்வலமாக வந்த காட்சி யாதவர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. “சாக்ஷாத் அந்தச் சூரிய பகவானே ஸ்ரீகிருஷ்ணரை தரிசிப்பதற்காக துவாரகை வீதிகளில் நடந்து வருகின்றார்” என்று அவர்கள் வியப்புடன் பார்த்தனர்.

ஸ்ரீகிருஷ்ண பகவானோ, “இல்லை, இல்லை. நம் ஸத்ராஜித் தனது கழுத்தில் விலைமதிப்பில்லாத சியமந்தக மணியை அணிந்து கொண்டு நடந்து செல்கிறார்” என்று அவர்களிடம் கூறினார்.

ஸத்ராஜித் தமது இல்லத்தை அடைந்தவுடன் பக்தி சிரத்தையுடன் அந்த சியமந்தகமணிக்குப் பூஜைகள் செய்து வரலானார்.

சியமந்தக மணியானது தன்னை முறையாகப் பூஜிப்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் எட்டு பாரம் (ஏறக்குறைய எழுநூற்றைம்பது கிலோ) தங்கத்தை வழங்கக்கூடியது. அந்த ரத்தினக்கல் இருக்குமிடத்தில் பஞ்சம், பசி, நோய் நொடிகள் எதுவுமின்றி சுபிட்சம் நிலவும்.

“இப்படிப்பட்ட சியமந்தகமணியானது ஸத்ராஜித் என்ற சாதாரண மனிதரிடம் இருப்பதை விட, வடமதுரையின் மன்னராகிய உக்கிர சேன மகாராஜாவிடம் இருந்தால் அது நாடு முழுவதற்கும் நன்மை




பயக்கக்கூடியதாக இருக்கும்” என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறினார். அதனை ஸத்ராஜித் ஏற்கவில்லை.

இந்நிலையில் ஸத்ராஜித்தின் தம்பியான ப்ரஸேனன் என்பவன் அந்த சியமந்தக மணியைத் தனது கழுத்தில் கட்டிக் கொண்டு ஒரு குதிரை மீது ஏறி வேட்டைக்குச் சென்றான். காட்டில் ப்ரஸேனனை வழிமறித்த சிங்கம் ஒன்று அவனையும், அவனது குதிரையையும் கொன்று அந்த மணியை எடுத்துச் சென்று விட்டது. மிகுந்த மதிப்புடைய அம்மணியை எடுத்துச் சென்ற சிங்கத்தைக் கொன்ற மஹாபராக்கிரமசாலியாகிய ஜாம்பவான் அதனைத் தாம் வசிக்கும் குகையில் வைத்திருந்தார்.

இந்நிலையில் ஸத்ராஜித்துக்கு அந்த சியமந்தக மணி விவகாரத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானின் மீது சந்தேகம் எழுந்தது. உக்கிரசேன மஹாராஜாவிடம் அந்த மணி இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறிய கண்ணபிரானே தன்னுடைய தம்பியைக் கொன்று அம்மணியைக் கவர்ந்து கொண்டு விட்டார் என்று ஸத்ராஜித் ஊரெங்கிலும் அபவாதத்தைப் பரப்பினார்.

தம் மீது எழுந்த அபவாதத்தை விரைவில் போக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பிய ஸ்ரீகிருஷ்ண பகவான் ப்ரஸேனன் சென்ற குதிரையின் கால் தடத்தைப் பின்பற்றி வனத்துக்குள் சென்று பார்த்தபொழுது அவனும் அவனுடைய குதிரையும் சிங்கத்தால் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டார். சற்று தூரத்தில் ப்ரஸேனனைக் கொன்ற சிங்கமும் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டார்.

யாரோ ஒரு பலசாலிதான் இவ்வாறு ஒரு சிங்கத்தினைக் கொன்றிருக்க முடியும் என்று ஊகித்து அருகில் இருந்த குகைக்குள் நுழைந்து பார்த்தார். இராமாவதாரம் முடிந்த பின்பும் நீண்டகாலம் ஜீவிததசையில் இருந்தவராகிய ஜாம்பவான் அந்த குகையில் வசித்து வந்தார்.

எதிர்பாராமல் குகையினுள்ளே நுழைந்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை முன்பின் பார்த்திராத ஜாம்பவான் அவரைச்சண்டைக்கு அழைத்தார். தொடர்ந்து 28 நாட்கள் சண்டையிட்ட பின்பும் தம்மால் வெல்லப்படாத வராக விளங்கிய கண்ணபிரானே முன்பு ஸ்ரீராமராக அவதரித்தவர் என்பதை உணர்ந்த ஜாம்பவான் சண்டையைக் கை விட்டு எம்பெருமானை வணங்கியதுடன்




**வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறுகளுக்குப் பரிகாரமாக பாத்ரபத (ஆவணி) மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் பவித்ரோத்ஸவம் அங்குரார்ப் பணத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெறும். பவித்திர சமர்ப்பணை, ஹோமங்கள் எனப் பலவிதமான நிகழ்வுகளுடன் அனைத்து விக்ரகங்களுக்கும் பவித்திர மாலைகள் அணிவிக்கப்படும். மாலை நேரங்களில் ஸ்ரீபத்மாவதித் தாயார் திருவீதி உலா வருவது சிறப்பு அம்சமாகும்.**



தம்முடைய புதல்வியான ஜாம்பவதியை அவருக்கு மணம் முடித்து வைத்தார்.

ஜாம்பவதியுடனும், சியமந்தக மணியுடனும் துவாரகைக்குத் திரும்பி எழுந்தருளிய ஸ்ரீகிருஷ்ண பகவான் நடந்ததை அனைவருக்கும் விளக்கிக் கூறினார். பின்னர் தாம் கொண்டு வந்த சியமந்தக மணியை ஸத்ராஜித்திடம் ஒப்படைத்தார். தம் மீது எழுந்த அபவாதம் நீங்கியதால் பகவானின் திரு உள்ளம் மகிழ்ச்சியில் பொங்கியது.

அதே சமயம் தாம் அநாவசியமாகக் கண்ணபிரானின் மீது பழி சுமத்தி விட்டதை எண்ணி மனம் வருந்திய ஸத்ராஜித் தமது தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பினார். தம்முடைய அன்பு மகள் சத்யபாமாவை ஸ்ரீகிருஷ்ணருக்குத் திருமணம் செய்து கொடுத்ததுடன் அந்த சியமந்தக மணியையும் அவருக்குப் பரிசாக அளித்தார்.

தமக்கு அபவாதத்தினை ஏற்படுத்திய சியமந்தக மணியை ஏற்க விரும்பாத ஸ்ரீகிருஷ்ண பகவான், மாதரசி சத்யபாமாவை மட்டும் மகிழ்ச்சியுடன் மணம் புரிந்து கொண்டு மிகவும் இன்பமாக இல்லறம் நடத்தினார்.

இவர்களுடைய திருமணத்திற்குப் பிறகே பாண்டவர்கள் தொடர்பான அரக்குமாளிகை எரிப்பு, நரகாசுரவதம், தர்மபுத்திரரின் ராஜசூய யாகம், கௌரவர்களிடம் ஸ்ரீகிருஷ்ண பகவான் பாண்டவர்களின் பொருட்டு அஸ்தினாபுரத்திற்குத் தூது சென்றது, மகாபாரதயுத்தம், தருமபுத்திரரின் பட்டாபிஷேகம் ஆகியவையெல்லாம் நடைபெற்றன.

பூமிப்பிராட்டியாரின் அவதாரமாகிய ஸத்யபாமாவின் மனமகிழ்ச்சிக்காகவே ஸ்ரீகிருஷ்ண பகவான் தேவலோகத்துக்குச் சென்று அங்கிருந்து பாரிஜாத மரத்தைப் பெற்றுக் கொண்டு வந்து சத்யபாமா வசித்த திருமாளிகையில் வளர்த்து வந்தார் என்பதிலிருந்து அந்த திவ்ய தம்பதிகள் இடையே இருந்த அந்நியோன்யமான உறவை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

*தொடர்ந்து அலசுவோம்...*



## ஸ்ரீபத்மாவதித்தாயார் ஆலயத்தில் துவஜாரோஹணம்



**"துவஜோ ஜீவஸ்சஉத்சதே" என்பது வேத கருத்தாகும். துவஜம் கோயிலுக்கு உயிர்நாடியான இடம். அகில உலகத்தின் பிரம்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையானின் திருமார்பு நாச்சியாரான ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு துவஜாரோஹணத்தோடு பிரம்மோத்ஸவம் தொடங்கப்படும். இந்த பிரம்மோற்சவத்திற்கு சகல தேவர்களையும், பக்தகோடிகளையும் அழைப்பதே துவஜாரோஹணத்தின் உட்பொருள். தாயாருக்கு மிகவும் பிரியமான வாகனமான யானை உருவம் பொறிக்கப்பட்ட கொடியினை பிரம்மோத்ஸவத்தின் முதல் நாள் இந்த துவஜஸ்தம்பத்தில் ஏற்றுவர். இந்நிகழ்ச்சிக்கு பின்னரே கோலாகலமாக தாயாருக்கு வாகன சேவைகள் நடைபெறும்.**



**கார்த்திகை மாதத்தை முன்னிட்டு சிவ வழிபாட்டு முறை ஸப்தகிரி வாசகர்களுக்காக ...**



# சிவ வழிபாட்டு முறை

பவித்திரமான மகிமைகள் நிறைந்த கார்த்திகை மாதத்தின் ஒவ்வொரு நாளும் உயர்வானதாகும். அதிலும் திங்கட்கிழமை சிவபெருமானுக்கு மேலும் உகந்த நாளாகும். கார்த்திகை மாத திங்கட்கிழமை செய்யப்படுகின்ற சிவபூஜையானது பல நற்பலன் களை அளிக்கவல்லது. ஒவ்வொருவரும் தம் வீட்டில் இம்மாதத்தில் உங்களுக்கு விருப்பமான தெய்வ ஆராதனையோடு, சிவ பூஜை யையும் செய்து அந்தப் பரமேஸ்வரனின் அருட்பார்வையைக் குடும்பத்தினரோடு பெற்றிட வேண்டுமென விரும்புகிறோம்.

அசம்ய-கேசவாதி நாமங்களை ஆசமனம் செய்த பின், பிராணாயாமம் செய்தல் வேண்டும்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ।
பிரசன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே ।।

வக்ர துண்ட மஹாகாய சூர்யகோடி சமப்ரப ।
அவிக்னம் குருமேதேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா ।।

ஶ்ரீமஹா விஷ்ணோராக்ஞயா ப்ரவர்தமானஸ்ய அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்தே ச்வேதவராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பரத வர்ஷே பரத கண்டே மேரோ: தக்ஷிண திக்பாகே ஶ்ரீசைலஸ்ய.... ப்ரதேசே கங்கா காவேர்யோ: மத்யதேசே ஸமஸ்ததேவதா ப்ராஹ்மண ஹரிஹர குருசரண சன்னிதௌ அஸ்மின் வர்தமான வ்யாவ ஹாரிக சாந்த்ரமானேன ... நாம சம்வத்ஸரே ...அயனே ருதௌ ...மாஸே ....பக்ஷே சுபதிதௌ... வாஸரே சுபநக்ஷத்ரே சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ ஶ்ரீமான்... நாமதேய:... ஶ்ரீமத:... கோத்ரஸ்ய... நாம தேயஸ்ய தர்மபத்னீ சமேதஸ்ய மம உபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா சாம்பசதாசிவ முத்திச்ய சாம்பசதாசிவ ப்ரீத்யர்தம் அஸ் மாகம் சஹகுடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய தைர்ய விஜய ஆயுராரோக்யோ பிவ்ருத்த்யர்தம் ஸமஸ்த சன்மங்களா வாப்யர்தம் கல்போக்த ப்ரகாரேண சிவபூஜாம் கரிஷ்யே.

### கணேச ஸ்மரணம்

*கஜானனம் பூதகணாதிசேவிதம் கபித்தஜம்பூபலசாரு பக்ஷணம் ।*
*உமாஸுதம் சோக வினாசகாரகம் நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம் ।।*

### குமார ஸ்மரணம்

*உமாகோமலஹஸ்தாப்ஜ ஸம்பாவிதலலாடிகம் ।*
*ஹிரண்ய குண்டலம் வந்தே குமாரம் புஷ்கரஸ்ரஜம் ।।*

### லக்ஷ்மி நாராயண ஸ்மரணம்

*யக்ஞேச அச்யுதகோவிந்த மாதவ அனந்த கேசவ*
*க்ருஷ்ண விஷ்ணோஹ்ருஷீகேச வாசுதேவ நமோஸ்துதே ।*
*சித்தலக்ஷ்மீ: மோக்ஷலக்ஷ்மீ: ஜயலக்ஷ்மீ: சரஸ்வதீ*
*ஶ்ரீர்லக்ஷ்மீர் வரலக்ஷ்மீச்ச பிரசன்னாமம ஸர்வதா ।।*

### நந்தி ஸ்துதி

நந்திகேச மஹாபாக சிவத்யான பராயண ।
மஹாதேவஸ்ய பூஜார்தம் அனுக்ஞாம் தாதுமர்ஹஸி ।।

### வீரபத்ர ஸ்மரணம்

வீரபத்ர நமஸ்தேஸ்துசிவாக்ஞானு ப்ரவர்தக
தக்ஷாத்வர த்வம்ஸகாய பத்ரரூபாயதே நம:
ஶ்ரீஉமாமஹேஸ்வராப்யாம் நம:
ஶ்ரீலக்ஷ்மீ நாராயணாப்யாம் நம:
ஶ்ரீவாணீ ஹிரண்யகர்பாப்யாம் நம:
ஶ்ரீசசீபுரந்தராப்யாம் நம:
ஶ்ரீஅருந்ததீ வஸிஷ்டாப்யாம் நம:
ஶ்ரீசீதாராமாப்யாம் நம:
ஸர்வேப்யோ மஹாஜனேப்யோ நம:

### த்யானம்

த்யாயாமி சங்கரம் சம்பும் நீலக்ரீவம் த்ரிலோசனம் ।
கங்காதரமுமாகாந்தம் நித்ய கல்யாண ரூபிணம் ।।
கோக்ஷீர தவளாகாரம் சந்த்ரபிம்ப சமாநநம் ।
பஸ்மபூஷித ஸர்வாங்கம் ருத்ராக்ஷ பரணாந்விதம் ।।
சாம்ப சதாசிவம் த்யாயாமி.

### ஆவாஹனம்

ஆவாஹயாமி தேவேசமாதிமத்யாந்த வர்ஜிதம் ।
ஆதாரம் ஸர்வலோகானாம் ஆச்ரிதார்தி விநாசனம் ।।
சாம்ப சதாசிவம் ஆவாஹயாமி.

### ஆசனம்

ஆசனம் க்ருஹ்யதாமீச நிர்மலம் ஸ்வர்ண நிர்மிதம் ।
ஆதாரம் ஸர்வஜகதா மந்தகாசுர சூதன ।।
சாம்ப சதாசிவாய நம: ஆசனம் சமர்பயாமி.

### பாத்யம்

பாத்யம் க்ருஹாண பகவான் பாவனம் பரமேஸ்வர ।
பார்வதீ ஹ்ருதயானந்த! பாபம் சர்வம் வ்யபோஹய ।।
சாம்பசதாசிவாய நம: பாத்யம் சமர்பயாமி.

### அர்க்யம்

அர்க்யம் க்ருஹாண கிரீச கந்தபுஷ்பாக்ஷதைர்யுதம் ।
அகமக்ஞானமகிலம் நீலகண்ட நிவாரய ।।
சாம்பசதாசிவாய நம: அர்க்யம் சமர்பயாமி.

### ஆசமனம்

க்ருஹாணாசமனார்தாய கங்காய சரிதாஹ்ருதம் ।
விமலம் ஜலமீசான வ்யாதீன்மே வினிவாரய ।।
சாம்ப சதாசிவாய நம: ஆசமனீயம் சமர்பயாமி.

### பஞ்சாம்ருதம்

பஞ்சாம்ருதம் க்ருஹாணேதம் பன்னகேச்வர பூஷண ।
பஞ்சவக்த்ர நமஸ்துப்யம் பஞ்சபாபானி நாசய ।।
சாம்பசதாசிவாய நம: பஞ்சாம்ருதம் சமர்பயாமி.

### ஸ்நானம்

கங்காக்லின்ன ஜடாபார சோம சோமார்தசேகர ।
சஹ்யஜாதி சரித்தோயை: ஸ்நாநம்குரு சதாசிவ ।।
சாம்பசதாசிவாய நம: ஸ்நாநம் சமர்பயாமி.

இங்கு சிவபிரானுக்கு அபிஷேகம் செய்தல் வேண்டும். அபிஷேகத்தின் போது "சிவாய நம:" எனும் திருநாமத்தினைத் துதித்தாலே போதும். அத்திருநாமத்தோடு "ஈசான தே தத்புருஷ நமோ கோராய தே சதா வாமதேவ நமஸ்துப்யம் சத்யோஜா தாயவை நம:" எனும் சுலோகத்தையும், "நமச்சங்கராய நமச்சம்பவே நமச்சிவாய நமோ பகவதே ருத்ராய", "நமச்சிவாய சாம்பாய சாந்தாய பரமாத்மனே" எனும் வாக்கியங்களைக் கூறுதல் வேண்டும். சிவலிங்கம் இல்லை எனில், ஜலத்தில் வில்வ தளங்களை இட்டு, அத்தளங்களால் அபிஷேகம் செய்வதைப் போன்று எண்ணி சிவபெருமானின் படத்தின் மீது தண்ணீர் தெளித்து ஸ்நான சேவையும் செய்யலாம்.

### வஸ்திரம்

கஜசர்ம தாராநந்த கரளாங்கித கந்தர ।
து கூலம் க்ருஹ்யதாம் தேவ துர்கதிம் மே நிவாரய ।।
சாம்ப சதாசிவாய நம: வஸ்த்ரம் சமர்பயாமி

### உபவீதம்

உபவீதம் க்ருஹாணேச பவித்ரம் பரமம் சுபம் ।
உமாகாந்த நமஸ்துப்ய முத்தமம் தேஹி மே பலம் ।।
சாம்ப சதாசிவாய நம: உபவீதம் சமர்பயாமி.

### ஆபரணம்

குண்டலாங்கத முக்யானி கும்டலீஸ்வர பூஷண ।
பூஷணானி க்ருஹாணேச பூதி பூக்ஷித விக்ரஹ ।।
சாம்ப சதாசிவாய நம: ஆபரணானி சமர்பயாமி.

### கந்தம்

கந்தம் குங்கும சம்யுக்தம் ம்ருக நாபி சமன்விதம் ।
மஹாதேவ க்ருஹாணேச மஹாபாபவிநாசன ।।
சாம்பசதாசிவாய நம: கந்தம் சமர்பயாமி.

### அக்ஷதை

அக்ஷதாநக்ஷத விபோ நக்ஷத்ரேச விபூஷண ।
சுத்த ஸ்படிக சங்காச ஸ்வாமின் ஸ்வீகுரு சங்கர ।।
சாம்ப சதாசிவாய நம: அக்ஷதான் சமர்பயாமி.

### புஷ்பம்

மல்லிகா குந்தமந்தார கமலாதீனி சங்கர ।
புஷ்பாணி பில்வபத்ராணி க்ருஹாண கருணாநிதே ।।
சாம்பசதாசிவாய நம: புஷ்பாணி சமர்பயாமி.

### அங்க பூஜை

| | | |
|---|---|---|
| பரமாய நம: | – | பாதௌ பூஜயாமி |
| குணாதீதாய நம: | – | குல்பௌ பூஜயாமி |
| ஜன்மஹீனாய நம: | – | ஜானுனீ பூஜயாமி |
| ஜகத்பித்ரே நம: | – | ஜங்கே பூஜயாமி |
| உமாபதயே நம: | – | ஊரூ பூஜயாமி |
| கிரீசாய நம: | – | குஹ்யம் பூஜயாமி |
| கருணாகராய நம: | – | கடிம் பூஜயாமி |
| நாநாரூபாய நம: | – | நாபிம் பூஜயாமி |
| உத்தமாய நம: | – | உதரம் பூஜயாமி |
| வாசுதேவாய நம: | – | வக்ஷம் பூஜயாமி |
| பஹு ரூபாய நம: | – | பஹுன் பூஜயாமி |
| ஹராய நம: | – | ஹஸ்தௌ பூஜயாமி |
| நீலகண்டாய நம: | – | கண்டம் பூஜயாமி |
| பஞ்சமுகாய நம: | – | முகம் பூஜயாமி |
| த்ரிநேத்ராய நம: | – | நேத்ராணி பூஜயாமி |
| பாலநேத்ராய நம: | – | பாலம் பூஜயாமி |
| ஸ்ருதிகம்யாய நம: | – | ச்ரோத்ரே பூஜயாமி |
| கபர்தினே நம: | – | கபர்தம் பூஜயாமி |
| சிவாய நம: | – | சிர: பூஜயாமி |
| சர்வேஸ்வராய நம: | – | சர்வாண்யங்கானி பூஜயாமி |

# சிவ அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் சிவாய நம:
ஓம் மஹேஸ்வராய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் பினாகினே நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் விரூபாக்ஷாய நம:
ஓம் கபர்தினே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சங்கராய நம: (10)
ஓம் சூலபாணயே நம:
ஓம் கட்வாங்கினே நம:
ஓம் விஷ்ணுவல்லபாய நம:
ஓம் சிபிவிஷ்டாய நம:
ஓம் அம்பிகா நாதாய நம:
ஓம் ஶ்ரீகண்டாய நம:
ஓம் பக்த வத்ஸலாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் திரிலோகேசாய நம: (20)
ஓம் சிதிகண்டாய நம:
ஓம் சிவாப்ரியாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் கபாலினே நம:
ஓம் காமாரயே நம:
ஓம் அந்தகாஸுர ஸூதநாய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் லலாடாக்ஷாய நம:
ஓம் காலகாலாய நம:
ஓம் க்ருபாநிதயே நம: (30)
ஓம் பீமாய நம:
ஓம் பரசுஹஸ்தாய நம:
ஓம் ம்ருகபாணயே நம:
ஓம் ஜடாதராய நம:
ஓம் கைலாஸவாஸிநே நம:
ஓம் கவசிநே நம:
ஓம் கடோராய நம:
ஓம் திரிபுராந்தகாய நம:
ஓம் வ்ருஷாங்காய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம: (40)
ஓம் பஸ்மோத்தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸாமப்ரியாய நம:
ஓம் ஸ்வரமயாய நம:
ஓம் த்ரயீமூர்தயே நம:
ஓம் அநீச்வராய நம:
ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் பரமாத்மநே நம:
ஓம் ஸோமஸூர்யாக்நி லோசனாய நம:
ஓம் ஹவிஷே நம:
ஓம் யக்ஞமயாய நம: (50)
ஓம் ஸோமாய நம:
ஓம் பஞ்வக்த்ராய நம:
ஓம் சதாசிவாய நம:
ஓம் விச்வேச்வராய நம:
ஓம் வீரபத்ராய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் ப்ரஜாபதயே நம:
ஓம் ஹிரண்ய ரேதஸே நம:
ஓம் துர்தர்ஷாய நம:
ஓம் கிரீசாய நம: (60)
ஓம் கிரிசாய நம:
ஓம் அநகாய நம:
ஓம் புஜங்கபூஷணாய நம:
ஓம் பர்காய நம:
ஓம் கிரிதன்விநே நம:
ஓம் கிரிப்ரியாய நம:
ஓம் க்ருத்தி வாஸஸே நம:
ஓம் புராராதயே நம:
ஓம் பகவதே நம:
ஓம் ப்ரமதாதிபாய நம: (70)
ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:
ஓம் ஸூக்ஷ்மதனவே நம:
ஓம் ஜகத்வ்யாபினே நம:
ஓம் ஜகத் குரவே நம:
ஓம் வ்யோமகேசாய நம:
ஓம் மஹா ஸேன ஜனகாய நம:
ஓம் சாருவிக்ரமாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் பூதபதயே நம:
ஓம் ஸ்தாணவே நம: (80)
ஓம் அஹிர் புத்ன்யாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் அஷ்டமூர்தயே நம:
ஓம் அநேகாத்மநே நம:
ஓம் ஸாத்விகாய நம:
ஓம் சுத்த விக்ரஹாய நம:
ஓம் சாச்வதாய நம:
ஓம் கண்டபரசவே நம:
ஓம் அஜாய நம:
ஓம் பாசவிமோசநாய நம: (90)
ஓம் ம்ருடாய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் தேவாய நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பூஷதந்தபிதே நம:
ஓம் அவ்யக்ராய நம:
ஓம் தக்ஷாத்வரஹராய நம:
ஓம் ஹராய நம: (100)
ஓம் பகநேத்ரபிதே நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் ஸஹஸ்ரபதே நம:
ஓம் அபவர்க்கப்ரதாய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் தாரகாய நம:
ஓம் பரமேஸ்வராய நம: (108)

சாம்ப சதாசிவாயநம:
அஷ்டோத்திர சதநாமபூஜாம்
சமர்ப்பயாமி



இங்கு பில்வாஷ்டகத்துடன் ஒவ்வொரு சுலோகத்திற்கும் “சிவாய நம:” என்று கூறி வில்வத்தை சமர்பித்தல் வேண்டும்

*சர்வாய க்ஷிதி மூர்தயே நம:*
*ருத்ராய அக்னி மூர்தயே நம:*
*பீமாய ஆகாச மூர்தயே நம:*
*மஹாதேவாய சோமமூர்தயே நம:*
*பவாய ஜலமூர்தயே நம:*
*உக்ராய வாயுமூர்தயே நம:*
*பசுபதயே யஜமான மூர்தயே நம:*
*ஈசாநாய சூர்யமூர்தயே நம:*

### தூபம்

*தசாங்கம் குக்குலோபேதம் சுகந்தம் சுமனோஹரம் ।*
*ஆக்ரேய ஸ்ஸர்வதேவானாம் தூபோயம் ப்ரிதிக்ருஹ்யதாம் ।।*
*சாம்பசதாசிவாய நம: தூபமாக்ராபயாமி.*

### தீபம்

*ஸாஜ்யம் த்ரிவர்திசம்யுக்தம் வஹ்னிநாயோஜிதம் மயா।*
*க்ருஹாண மங்களம் தீபம் த்ரைலோக்யதிமிராபஹம் ।।*
*சாம்பசதாசிவாய நம: தீபம் சமர்பயாமி.*

### நைவேத்யம்

அன்னம் சதுர்விதம் ஸுபபலபக்ஷ்ய சமன்விதம் ।
ததி மத்வாஜ்ய சம்யுக்தம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம் ।।
சாம்பசதாசிவாய நம: அம்ருத மஹாநைவேத்யம் சமர்பயாமி.
மத்யே மத்யே பானீயம் ஸமர்பயாமி. ஆசமனீயம் சமர்பயாமி.

### தாம்பூலம்

பூகீ பலசமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் ।
கற்பூர சூர்ண சம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ।।
சாம்பசதாசிவாய நம: கற்பூர தாம்பூலம் சமர்பயாமி.

### நீராஜனம்

சந்த்ராதித்யௌச தரணீச வித்யுதக்னித்வமேவச ।
த்வமேவ சர்வஜ்யோதீன்ஷீ பஜ நீராஜனம் ப்ரபோ ।।
சாம்பசதாசிவாய நம: ஆனந்த கற்பூர நீராஜனம் சமர்பயாமி.

### புஷ்பாஞ்சலி

மந்தார நீலோத்பல குந்தஜாதீ புன்னாகமல்லீ கரவீர பங்கஜை: ।
புஷ்பாஞ்சலிம் பில்வதலைஸ்து தேவ சாம்ப: த்வதந்க்ரௌ
விநிவேசயாமி ।।
சாம்பசதாசிவாய நம: மந்தர பஷ்பாஞ்சலி சமர்பயாமி.

### பிரதக்ஷிண நமஸ்காரம்

யானிகானிச பாபானி ஜன்மாந்தர க்ருதானிச ।
தானிதானி வினச்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே ।।
சாம்பசதாசிவாய நம: ஆத்மப்ரதக்ஷிண நமஸ்காரான் சமர்பயாமி.

### நமஸ்காரம்

மஹாதேவ நமஸ்தேஸ்து மன்மதாரே நமோஸ்துதே ।
அம்ருதேச நமஸ்துப்யம் ஆச்ரிதார்த ப்ரதாயினே ।।
சாம்பசதாசிவாய நம: நமஸ்காரான் சமர்பயாமி.

### சத்ர சாமரம்

த்ராஹிமாம் தேவதேவேச தருணேஸ்து சிகாமணே ।
ஈப்ஸிதம் தேஹி மே தேவ தயாராசே நமோஸ்துதோ ।।
சாம்ப சதாசிவாய நம: சத்ர சாமர ந்ருத்தகீதம் வாத்யாதி
ஸமஸ்த ராஜோபசாரான் சமர்பயாமி.

### இதமர்க்யம்

பூஜாந்தே ஶ்ரீரர்க்ய ப்ரதானம் கரிஷ்யே –
நம:சிவாய சாம்பாய சர்வபாபஹராயச ।
சிவதேவ மயாதத்தமிதமர்க்யம் க்ருஹாண ப்ரபோ ।।
சாம் சதாசிவாய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

மயாக்ருதான்யசேஷானி பாபானி நுஜ சங்கர ।
மஹாதேவ! மயாதத்தம் க்ருஹாணார்க்யம் மயாசிவ ।।
சாம்ப சதாசிவாய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

வ்யோமகேச நமஸ்துப்யம் சோமாத்மன் வ்யோமரூபிணே ।
நக்ஷத்ரமாலினே தேவ க்ருஹணார்க்ய மிதம் ப்ரபோ ।।
சாம்ப சதாசிவாய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

அம்பிகாயை நமஸ்துப்யம் நமஸ்தே தேவி பார்வதி ।
க்ருஹாணார்க்யம் மயா தத்தம் சுப்ரீதாவரதாபவ ।।
அம்பிகாயை நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

சுப்ரஹ்மண்ய மஹோபாக கார்திகேய ஸுரோத்தம ।
க்ருஹாணார்க்யமிதம் தத்தம் சுப்ரீதோ வரதோபவ ।।
சுப்ரஹ்மண்யாய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

நந்திகேச மஹாபாக சிவத்யான பராயண ।
க்ருஹாணார்க்யமிதம்தத்தம் நந்திகேச நமஸ்துதே ।।
நந்திகேசாய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்.

சண்டிகேசாய நம: இதமர்க்யம் மிதமர்க்ய விதமர்க்யம்.

அனயா பூஜயா அர்க்ய ப்ரதானேன ச சபரிவார: சாம்பசிவ ப்ரீயதாம்.
கரசரணக்ருதம் வாகர்மவாக்காய ஜம் வா
ச்ரவண நய நஜம் வா மானசம் வாபரதம் ।
விஹிதமவிஹிதம் வா சர்வமேதத் க்ஷமஸ்ய
சிவசிவ கருணாப்தே மஹாதேவ சம்போ ।।

# திருமலை தரிசனம்


*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**தி**ருமலைக்கு வரும் பக்தர்கள் எவ்வித இன்னல்களும், தொந்தரவும் இல்லாமல் கோவிந்தனை வழிபட பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டு இருக்கிறது. வரிசையில் நிற்கும், கூடத்தில் காத்திருக்கும் பக்தர்களுக்குப் பசி மற்றும் அசதி தெரியாமலிருக்க சிற்றுண்டி, காபி/தேனீர், குழந்தைகளுக்குப் பால் என்று வழங்கப்படுகிறது. காத்திருக்கும் நேரத்தில் மன உளைச்சலுக்கு ஆளாகாமல் அந்த பரமனின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க இது உதவும்.

மாத்ருஸ்ரீ தரிகொண்டா வெங்கமாம்பா அன்னப் பிரசாத நிலையத்தில் பக்தர்களுக்கு இலவசமாக அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. ஏழுமலையானின் தரிசனத்திற்கு வந்த எந்த பக்தரும் உணவு இல்லாமல் அல்லல் படக்கூடாது என்றும், பசியுடன் வாடக்கூடாது என்றும் நிறுவப்பட்டதே இந்த மையம். பல நாடுகளில் இருந்து வரும் பக்தர்களின் பேராதரவைப் பெற்ற இந்தத் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு பல்லாயிரக்கணக்கானோருக்கு உணவளிக்கப்படுகிறது.

அதேபோல் பக்தர்களின் தாகத்தைத் தணித்திட ஜலப்பிரசாதம் எனும் பெயரில் குடிநீர் மையங்கள் திருமலையில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இதில் ஆர். ஓ. முறையில் சுத்திகரிக்கப்பட்ட சுவையான சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது.

தலைமுடியைக் காணிக்கையாக அளிப்பது திருமலையில் தொன்றுதொட்டு வரும் ஒரு சம்பிரதாயம். மொட்டை அடிக்கவும் இங்கு பக்தர்கள் ஒரு ரூபாய் கூட செலுத்த வேண்டாம். அதுவும் இலவசமாகச் செய்யப்படும்.



பயணத்தின் போது நோய்வாய்ப்படும் பக்தர்களுக்காக திருமலையில் உள்ள அஸ்வினி மருத்துவமனையில் ஒரு அவசரப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு சிகிச்சை தேவை என்றால் உடனே கீழ்த்திருப்பதியில் உள்ள பெரிய மருத்துவமனைக்கு எந்நேரமும் கொண்டு செல்லும் வசதியும் உள்ளது. மேலும், இரண்டு மலைப்பாதைகளிலும் ஆம்புலன்ஸ் வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

நடந்து வரும் பக்தர்களும் தங்களின் பொருட்களை சுமந்து வர வேண்டிய அவசியம் இல்லை. மலையடிவாரத்தில் உள்ள உடைமைகள் திருமலைக்குக் கொண்டு செல்லும் மையத்தில் (லக்கேஜ் கவுண்டர்) தங்களின் பெட்டிகள் அல்லது பைகளைக் கொடுத்து விட்டால், அவற்றை மலை உச்சியில் உள்ள இன்னொரு கவுண்டரில் இலவசமாக சேர்த்து விடுவார்கள். மலையேறியபின் பக்தர்கள் அங்கே அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

சொந்த வாகனங்களில் வரும் பக்தர்களுக்காக திருமலையில் நிறைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளும் செய்யப்பட்டு உள்ளது. ஒரு நாளைக்கு ஆயிரக்



**திரு.அத்தி ரங்கராஜன்,**
**திருப்பதி.**



# தனலக்ஷ்மியும் தன்வந்தரியும்



**தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற்று அதனை உண்டு நீண்ட நாள் வாழ எண்ணினர். அதற்காகப் பாற்கடலைக் கடைந்தபொழுது அவதரித்தவர் தான் தன்வந்தரி. விஷ்ணுவின் அம்சமாக ஜனித்து உலகம் போற்றும் ஆயுள் வேதம் (ஆயுர்வேதம்) என்ற மருத்துவத்தை உலகிற்கு அருளினார்.**

*''மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள்*
*தனத்துள்ளான் தண்துழாய் மார்பன் - சினத்துச்*
*செருநர் உகச்செற்று உகந்த தேங்கு ஓத வண்ணன்*
*வரு நரகம் தீர்க்கும் மருந்து''* –2284

*''மருந்தும் பொருளும் அமுதமும் தானே*
*திருந்திய செங்கண்மால் ஆங்கே - பொருந்தியும்*
*நின்று உலகம் உண்டு உமிழ்ந்தும் நீர்ஏற்றும் மூவடியால்*
*அன்று உலகம் தாயோன் அடி''* –2285

**திருப்பாற்கடலில் உமிழ்ந்தும் கண் வளர்ந்த திருத்துழாய் மார்புடைய திருமால், மலரில் வாழும் திருமகள் மார்பகங்களில் உள்ளவன்; அடியார்களின் பகைவர்களைச் சீறி அழித்த பெருமை உடையவன்; கடல் நிறமுடைய எம்பெருமான் பிறவியாகிய நரகத்தைப் போக்க வல்ல மருந்தாவான்; அவன் என் நெஞ்சில் வாழ்கிறான். பரம்பொருளான திருமால் செந்தாமரைக் கண்களைப் பெற்று, காக்கும் கடவுளாகத் திகழ்கிறான்; உலகங்களை உண்டு உமிழ்ந்து அருள்பாலிக்கிறான். அன்று மாவலியிடம் நீர் ஏற்று மூவடியால் உலகளந்த திருமாலின் திருவடிகளே பிறவிப் பிணிக்கு மருந்தாகவும், அரும்பொருள் அமுதமானான் என்று பேயாழ்வார் அருளுகிறார்.**

கணக்கான கார்கள் வந்தாலும் நிறுத்தி வைக்கும் அளவுக்கு வசதி இங்கு உள்ளது.

முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக, மின்சாரத்துடன் இயங்கும் வாகனங்கள் கோயிலுக்கு அருகில் வைக்கப்பட்டு இருக்கும். திருக்கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் நடக்க முடியாதவர்கள் இந்த வாகனங்களை உபயோகித்து கோயில் வாசல் வரை செல்லலாம்.

தேவஸ்தானத்தினர் தகவல் தொழில் நுட்பத்தை உபயோகிக்கும் பொருட்டு கொண்டு வந்துள்ள “திதிதேவஸ்தானம்ஸ்'' எனும் இலவச கைப்பேசி செயலி தரிசனத்தை மிகவும் எளிதாக்கி வருகிறது. இந்த செயலியின் மூலம் பக்தர்கள் யாவரும் தரிசனம், விடுதி, லட்டு, ஸ்ரீவாரி சேவை, அங்கப் பிரதக்ஷிணம் மற்றும் இதர சேவைகளை முன்பதிவு செய்து கொள்ளலாம். திருமலையில் சேவைகள் மற்றும் தரிசன முறைகள், அன்றைய நிகழ்ச்சிகளைப் பொறுத்து முன்னறிவிப்பின்றி மாறும் வாய்ப்புள் ளது. அதனால் பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய சேவைகளை ஒரு நாள் முன்பு சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முன்னேற்பாட்டுடன் மேற்கொள்ளப்படும் திருமலை யாத்திரை, பக்தர்களுக்கு ஒரு மிகவும் உன்னதமான, பரவசமான அனுபவத்தைக் கொடுக் கும். அவர்களை கோவிந்தனின் கிருபையில் நனையச் செய்யும் மற்றும் புளகாங்கிதம் அடையச் செய்யும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

*முற்றும் ...*

# திருமகளின் திருவருள்

- திருமதி ஹேமா,
திருப்பதி.

திருவேங்கடவனின் பட்டத்து ராணியாக திருச்சானூரில் எழுந்தருளி, சரணாகதி என வரும் பக்தர்கள் அனைவருக்கும் சரணாகதியை அருளு மாறு திருவேங்கடவனிடம் கூறுபவளே ஸ்ரீமஹாலக்ஷ்மியான ஸ்ரீபத்மாவதித் தாயார்.

திருவேங்கடவன் மற்றும் தாயாரின் திருவிளையாடல்கள் எண்ணில் அடங்கா. தெய்வங்கள் நித்தமும் பலர் வாழ்க்கையில் அவர்களுக்கு வேண்டியதை எவ்வாறு திருவருள் புரிகிறார் என்பது அவர்களுக்கே தெரிந்த விஷயம். ஒரு சிலர் மட்டும் அதைப் பலரும் பயனடையும் விதத்தில் சொல்லிக்கொள்வதும் உண்டு. அவ்வகையில் ஒரு அம்மையார் தெரிவித்த தகவல் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு “ஸப்தகிரி” வாசகர்களுக்காக...

21 வயது நிரம்பிய ஒரு இளம்பெண்ணிற்கு கல்யாணம் நடந்த சில மாதங்களில் தம்பதியோடு தெய்வ தரிசனத்திற்குச் சென்ற இடத்தில், கோதாவரி ஆற்றில் நீராடச் சென்றனர். அப்போது எவரும் எதிர்பாராத நிலையில் அவளின் கணவர் நீரோடு அடித்துச் செல்லப்பட்டார். அந்தப் பெண்ணின் தாயார் தன்னுடைய மகளின் இந்நிலைமை மாறி அவளுக்கு மறுமணம் நடந்திட வேண்டும் என எண்ணினார். அப்போது தை மாதம் வருகின்ற வெள்ளிக்கிழமைகளில் திருச்சானூர் தாயார் சந்நிதியில் மஞ்சள் கயிறு வைத்து சுமங்கலிப் பெண்களுக்குக் கொடுத்தால் விரைவில் திருமணம் கைகூடும் என்று சுமங்கலிப் பெண் ஒருவர் கூறினாராம்.

அவளுடைய தாயாரும் தன் மகளுக்காக வேண்டிக்கொண்டு மஞ்சள் கயிற்றினை சுமங்கலி களுக்கு தாங்களே கொடுக்க இயலுமா? என அச் சுமங்கலிப் பெண்ணிடம் வினவினார். அந்த சுமங்கலிப் பெண்ணும் தன்னிடம் இருந்த 11 கயிறு களை தாயாரிடம் வேண்டிக் கொண்டு சுமங்கலி களுக்கு அளித்தார். தாயார் மீது நம்பிக்கையோடு வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப அவளுக்கு அடுத்து வந்த கார்த்திகை மாதத்தில் நல்ல கணவர் அமைந்து மறுமணமும் நடைபெற்றது. அவள் தாயாரும் மிகுந்த மகிழ்ச்சியில் தை மாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் 108 மஞ்சள் கயிறுகளை தாயார் முன் வைத்து சுமங்கலிப் பெண்களுக்கு வழங்கினார்.

(தை மாதத்தில் வருகின்ற வெள்ளிக் கிழமைகளில் மஞ்சள் கயிறை தாயார் முன் வைத்து சுமங்கலிப் பெண்களுக்கு வழங்கி னால் திருமணம் நடைபெறாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கை இங்கு வழக்கத்தில் உள்ளது. அவ்வாறு திருமணம் நடைபெற்ற பின்னர் திருமணத்திற்கு முன்னர் எந்த எண்ணிக்கையில் கயிறுகள் கொடுத் தோமோ அதற்கு இரு மடங்காக கொடுப்பது வழக்கம்).



சிந்தை மயக்கும் விந்தை கற் சிற்பங்கள்



# மஹாலக்ஷ்மியின் மணவாளன்

– படிமக்கலைஞர்
திரு.ப.சரவணன், குடந்தை,
8610819456.

நாளும் நலம் காண அஷ்ட ஐச்வர்யம் அளிக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் நித்யம் வாசம் செய்ய தன் திருமார்பில் இடம் தந்த ஸ்ரீவிஷ்ணு பகவான் எழுந்தருளியுள்ள 108 திவ்ய தேசங்களில் பக்தர்களுக்கு நின்ற, இருந்த, கிடந்த (சயன) என மூன்று நிலைகளில் காட்சியளிக்கிறார்.

தசாவதார மூர்த்தியான ஆதி பரம்பொருள் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி இருந்த திருக்கோலத்தில் சகல உலகங்களையும் இயக்கும் அதிதேவதைகளைப் படைக்க எண்ணிய மாத்திரத்தில் எழுந்து நின்றார். அதனை தொடர்ந்து அவைகள் இயக்கம் முறை வழுவாது செயல்பட அனைத்தையும் கண்காணித்துக் கொண்டே அறிதுயில் (சயனித்த) திருக்கோலத்தில் எழுந்தருளி உள்ளார் என்பது புராண வரலாறுகள் எடுத்துரைக்கும் தடமாகும்.

திருமாலின் ஐந்து வகையான பிரதிஷ்டைகளைப் பற்றி பாஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதில் நாம் தரிசனம் காணும் திருக்கோலங்கள் மூன்று ஆகும். அவைகள் கீழ்க்கண்டவாறு 1) ஸ்தாபனா – திருமாலை நின்ற திருக்கோலத்தில் அமைத்துத் தொழுவது, 2) அஸ்தாபனா – திருமாலை இருந்த திருக்கோலத்தில் அமைத்துத் தொழுவது, 3) ஸமஸ்தாபனா – திருமால் பள்ளி கொண்ட திருக்கோலத்தில் அமைத்துத் தொழுவது என்பவை.

108 திவ்ய தேசங்களில் நின்ற திருக்கோலத்தில் எம்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் – 67 ஆகும். இதில், கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம் – 39, மேற்கு நோக்கி நின்ற திருக்கோலம் – 12, தெற்கு நோக்கி நின்ற திருக்கோலம் – 14, வடக்கு நோக்கி நின்ற திருக்கோலம் –2.

இருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள தலங்கள் – 17, இதில் கிழக்கு நோக்கி இருந்த திருக்கோலம் – 13, மேற்கு நோக்கி இருந்த திருக்கோலம் –3, தெற்கு நோக்கி இருந்த திருக்கோலம் இல்லை, வடக்கு நோக்கி இருந்த திருக்கோலம் –1.

சயனத்திருக்கோலம் தலங்கள் –24. இதில், கிழக்கு நோக்கிய சயனம் – 18, மேற்கு நோக்கிய சயனம் – 3, தெற்கு நோக்கிய சயனம் –3, வடக்கு நோக்கிய சயனம் கிடையாது.

திருமாலின் சயனங்கள் 10 வகைப்படும். அவை 1) ஜல சயனம், 2) தல சயனம்,3) புஜங்க சயனம்(சேஷ சயனம்), 4) உத்தியோக சயனம்,5) வீர சயனம், 6) போக சயனம், 7) தர்ப்ப சயனம், 8) பத்ர சயனம் (பத்ர எனில் ஆலமரத்து இலை), 9) மாணிக்க சயனம், 10) உத்தான சயனம் ஆகியவையாகும்.

ஒரே சன்னிதியில் நின்ற, இருந்த, கிடந்த என்ற மூன்று திருக்கோலம் உண்டு. அவ்வாறு அமைந்த தலங்கள் பல உண்டு.

உதாரணத்திற்குத் திருக்கோட்டியூரில் முதல் தளத்தில் பாற்கடல் வாசனாகவும், இரண்டாவது தளத்தில் நின்றத் திருக்கோல நாராயண மூர்த்தியாகவும், மூன்றாவது தளத்தில் இருந்த திருக்கோலத்தில் பரமபதநாதனாகவும் எழுந்தருளியுள்ளார்.







அது போல் திருநீர் மலை, மதுரை, கூடலழகர் மற்றும் அரியலூர் மாவட்டம் ஸ்ரீபுரந்தான் போன்ற சில ஊர்களில் உள்ள திருக்கோயில்களிலும் மூன்று திருக்கோலத்தில் பெருமாள் எழுந்தருளி உள்ளார்.

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் இம்மூன்று திருக்கோல வடிவங்கள் போல் புராண, இதிகாச வரலாற்று தொடர்புடைய பல சைவ, வைணவ இறை வடிவங்கள் தென்னிந்திய ஆலயங்களில் உள்ள ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், பதினாறு கால் மண்டபம், யாளி மண்டபம், கல்யாண மண்டபம் போன்ற மண்டபங்களின் தூண்களில் கலைமிகு புடைப்புச் சிற்பங்களாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## புஷ்கரணி ஸ்நானம் செய்யும் பக்தர்கள் கவனத்தில் வைத்து கொள்ள வேண்டிய விஷயங்கள்



- திருடர்கள் உள்ளனர் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.
- பக்தர்கள் தம் குழந்தைகளோடு உடைமைகளையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- புஷ்கரிணி ஸ்நானத்தின் போது சோப்பு, சாம்புகளைப் பயன்படுத்துதல் கூடாது.
- புஷ்கரிணியில் துணியைத் துவைத்தல் கூடாது.
- புஷ்கரிணியில் நீச்சல் அடித்தல் கூடாது.
- புஷ்கரிணி மற்றும் சுற்றுப்புறத்தினைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
- ஈரமான ஆடையுடன் ஆலயத்திற்குள் நுழையாதீர்கள்.
- உலர்ந்த ஆடை அணிந்து மட்டுமே ஆலயத்திற்குள் நுழைதல் வேண்டும்.
- காணிக்கை மற்றும் முடிப்புகளை உண்டியில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.
- புஷ்கரிணியில் குளித்த பின்னர் ஆடைகளை விட்டுச் செல்லுதல் கூடாது.

**மேற்காணும் சிற்பங்கள் விபரம்**

ஸ்ரீ(கஜ) மஹாலக்ஷ்மித் தாயார் சிற்பம் – உய்யக்கொண்டான் மலை உஜ்ஜீவனேஸ்வரர் ஆலயம்.

ஸ்ரீலக்ஷ்மி நாராயணர் இருந்த திருக்கோலச் சிற்பம் விருஞ்சிபுரம் வழித்துணை நாதர் ஆலயம்.

ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் மஹாவிஷ்ணு நின்ற திருக்கோலச் சிற்பம் வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயம், ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் கிடந்த திருக்கோலச் சிற்பம், திருவிடந்தை நித்ய கல்யாணப் பெருமாள் ஆலயம் ஆகிய ஆலயங்களில் இந்தச் சிற்பங்கள் உள்ளது.

# மஹாலக்ஷ்மி வடிவான துளசியின் மகிமை

தேவதைகளும் ராக்ஷஸர்களும் அமிர்தத்திற்காக பாற்கடலைக் கடையும் போது தன்வந்தரி பகவான் சதுர்புஜ ரூபியாய், பீதாம்பர தாரியாய், பிரசன்னவதனராய் தங்கக் கலசத்தில் அமிர்தத்தை ஏந்தி அவதாரம் செய்தார். அச்சமயம் பக்தவத்ஸலனான மஹாவிஷ்ணுவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தோன்றியது. அந்த ஆனந்தக் கண்ணீர் அவர் திருக்கரத்தில் இருந்த அமிர்த கலசத்தில் விழ செடி தோன்றியது. அச்செடியே துளசியாகும். இதற்கு சமமான செடி இவ்வுலகில் இல்லையென்பதால் இதனைத் துளசி என்பர். இச்செடியில் லக்ஷ்மி குடிகொண்டுள்ளாள். மேலும் அநேக பகவத் ரூபங்களும் உள்ளன.



- கார்த்திகை மாத துளசி வழிபாடு பரமபதம் அளிக்கும்.
- துளசிச்செடியை நட்டு அதன் வேர்கள் எவ்வளவு காலம் பரவுகிறதோ ஆயிரம் யுகங்கள் ஸ்வர்க லோகத்தை அனுபவிப்பார்கள்.
- துளசியின் மகிமையைக் கேட்போர் பாவங்கள் விலகிடும்.
- துளசி இலையில் ஸ்ரீதேவி, கிளைகளில் கமலா தேவி, புஷ்பத்தில் இந்திரா தேவி, விதைகளில் லக்ஷ்மி தேவியும் வாசம் செய்கிறார்கள்.
- துளசி, புஷ்பங்கள் ஒரே பாத்திரத்தில் வைத்தல் கூடாது.
- துவாதசி, அமாவாசை, பௌர்ணமி, ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் துளசியைப் பறிக்கக் கூடாது.
- துளசிச் செடியின் நடுவில் விஷ்ணுவும், வலது புறத்தில் சிவனும், இடது புறத்தில் பிரம்மாவும், மூலத்தில் நாராயணனும், தலைபாகத்தில் ஜனார்த்தனனும், கிளைகளில் சர்வ தேவதைகள், முனிவர்கள், இலையில் அப்ஸரஸ், மஞ்சரியில் லக்ஷ்மி தேவியும், பூவில் புருஷோத்தமனும், இலையின் நுனியில் சகல தீர்த்தங்களும், தளத்தில் ஏழு கடல்களும், இலையின் அடிபாகத்தில் கங்காதேவியும் உள்ளனர்.
- இவ்வளவு வடிவங்கள் நிறைந்த துளசிச் செடியை இந்த கார்த்திகை மாதத்தில் பூஜித்து பரமபதத்தை அடைய முயல்வோம்.

## தாயார் குறித்த குறுக்கெழுத்துப் புதிர் - 100

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | |
| | 2 | 3 | | | | | | | | | |
| | | | | | | 4 | 5 | | | | |
| | | | 6 | | | | | | | | |
| | | | | | | 7 | | | | 8 | |
| | | | | | 9 | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | 10 | | | | | | | |
| | | | 11 | | | | 12 | | 13 | | |
| | | | | | | | | | | | 14 |
| | | | | | | | | 15 | | | |
| | | | | | | | | | | | 16 |

தொகுப்பு : திரு.டி.ஆர், மனோகர், தஞ்சாவூர், 99426 44807.

புதிருக்கு விடை அறிய 43ஆம் பக்கம் பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

01. தமிழகத்தில் பத்மாவதித் தாயாருக்கு தனிக்கோயில் உள்ள இடம்...(11).
03. ஹேமாம்புஜ வல்லித்தாயாராக மஹாலக்ஷ்மி அருளும் தலம்..(10)
05. திருக்கண்ணங்குடியில் உலகத் தலைவியாக உள்ளவர்.....(5)
06. ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு தினமும் நடைபெறுகின்ற பூஜைகளில் ஒன்று....(8)

### வலமிருந்து இடம்

04. தாயாரின் பிரம்மோத்ஸவம் முடிந்த மறுநாள் நடைபெறுவது ....(3) யாகம்.
14. லக்ஷ்மி பிராட்டியைத் துதித்து தேவேந்திரன் பாடியது...(10)
15. திருமகளின் வேண்டுகோளுக்கிணங்கி ஈசன் ஆடிய நடனம்...(8)
16. திருச்சானூரில் தாயார் அவதரித்தத் தீர்த்தக்குளம்...(12)

### மேலிருந்து கீழ்

01. அஷ்ட லக்ஷ்மி கோயில் தமிழகத்தில் அமைந்திருக்கும் இடம்...(10)
02. திருச்சானூர் திருக்கோயிலில் நடக்கின்ற வழிபாட்டு முறை...(10)
03. அண்ணன் கோவிலில் அலர் மேல் மங்கை அமர்ந்த தலம்....(9)
07. திருநாகையில் திருமாலின் பத்தினி அழகிய ....(5) வல்லி.
08. மஹாலக்ஷ்மித் தாயாரின் அம்சமான .......(5) தருவை மங்கல நிகழ்ச்சிகளில் காணலாம்.
09. ....(3) மகரிஷி வசித்ததால் திருச்சானூர் என்ற பெயர் வந்தது.

### கீழிருந்து மேல்

10. தாயார் பெருமாளை மண்டியிட்டு வணங்கும் காட்சியை....(4) யப்பன் கோயிலில் காணலாம்.
11. சுமங்கலிப் பெண்கள் கடைபிடிக்கின்ற பூஜைகளில் ஒன்று ....(5) விரதம்.
12. .....(6) இத்திருக்கோயிலில் பெருமாளுடன் தாயார் மணக்கோலத்தில் காட்சி அளிக்கின்றார்.
13. திருக்கோவலூர் திருத்தலத்தில் த்ரிவிக்ரமனின் தர்ம பத்தினி.....(5) நாச்சியார்.
15. பிரம்மோத்ஸவ வீதி உலாவின்போது பிராட்டியார் அணிகின்ற தங்க நாணய சரம்.....(7)
16. மயிலாடுதுறையில் மணமுள்ள (வாசனையான) நாச்சியார்.....(10)


‘உங்களுக்காக நாங்கள்’


உங்கள் ஆலோசனைகள்/தரிசனம், சேவைகளுக்கு தொடர்பு கொள்ள...

டோல் ப்ரீ எண் 1800-425-4141

# பழம் பெரும் கார்த்திகை தீபத் திருவிழா

- பனையபுரம் அதியமான்,
சென்னை, 9444800935.

தீப வழிபாட்டினை போற்றும் மாதமாக கார்த்திகை மாதம் விளங்குகின்றது. இந்த தீப வழிபாடு இன்று நேற்று தொடங்கியது அல்ல. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்தில் இருந்து வருவதை கல்வெட்டுகளும், இலக்கியங்களும் நமக்கு சான்றாகக் இருக்கின்றன. இந்த கார்த்திகை தீபத்திருநாளை முன்னிட்டு தீப வழிபாட்டின் வேர்களையும், விழுதுகளையும், அதன் சிறப்புக்களையும் அறிய துணை புரிவது இந்தச் சிறப்பு கட்டுரை.



## தீப வழிபாட்டின் தோற்றம்

மனிதனின் அத்தியாவசிய தேவைகள் மூன்று. அவை உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க உறையுள் எனும் வீடு. ஆனால் இதற்கும் ஒரு படி மேலாக, உலக உயிர்கள் அனைத்திற்கும் தேவையானது அவ்வுயிர்கள் வாழ்வதற்கான ஒளி எனப்படும் வெளிச்சமாகும்.

சூரியனும், சந்திரனும் இல்லாத உலகத்தினை நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அவை தரும் ஒளியும், அதன் வெப்பமும் அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இவற்றில் இறைவனது படைப்பாக விளங்குவதே ஞாயிறு. அதில் எழும்புகின்ற ஒளியும் வெப்பமும் இல்லாவிட்டால் இந்த உலகமும் உயிர்களும் எப்படி வாழ்வது?

இதனால் தான் அனைத்து மக்களிடமும் இந்த ஒளி வழிபாடு தொன்று தொட்டு பரவிப் படர்ந்து உள்ளது. இருள் நீக்கும் தன்மையோடு மருள் நீக்கும் தூய்மையும், ஆக்கி காத்து அழிக்கும் தன்மையும் அருவாய், உருவாய், அருவுருவாய் இயங்கும் இயல்பும், பஞ்சபூதங்களில் ஒன்றான தீயினிடத்தில் நிறைந்துள்ளன. இந்தத் தீயே அக்னியாகப் போற்றப்படுகின்றது.

இப்படி அக்னியின் இயல்பும், இறைவனின் இயல்பும் இணைந்து இருப்பதன் காரணமாக ஒளி வழிபாடு எனும் தீப வழிபாடாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

## இலக்கியங்களில் ஜோதி

*''ஆதி அந்த ஆயினாய் சோதியில் ஒரு சோதியனாய்''* என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இறைவன், *''ஞானச் சுடர் விளக்காய் நின்றவன்''* என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார். *''தூண்டா விளக்கின் நற்சோதி''* என சுந்தரரும், *''சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே''* என்று மாணிக்க வாசகரும் பாடுகின்றனர்.



*''கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாக நின்றான்''* என சேக்கிழார் பாடிப் பரவுகின்றார். *''அருட்பெருஞ்ஜோதி!''* என்பது திருவருட்பிரகாச வள்ளலார் வடலூர் ராமலிங்க சுவாமிகளின் மூல மந்திரமாகும். *''பயிலும் சுடர் ஒளி மூர்த்தியைப் பங்கையக் கண்ணனை''* என்று நம்மாழ்வார் பாற் கடல் பரமனைக் கூறுகின்றார். *''சுடரினும் சுடரும்*

திருமூர்த்தி'' என்று திருத்தக்கதேவர் பாடுகின்றார். இப்படியே சைவ அருளாளர்களும், வைணவ அருளாளர்களும், கவிஞர்களும் இறைவனை ''பொங்கழல் உருவனா கவே'' காண்கின்றனர்.

இந்த அனல் வழிபாடே, பின்னாளில் திரு விளக்கு வழிபாடாக மக்களிடையே வழக்கத்திற்கு வந்துள்ளதை அறிய முடிகின்றது. மொத்தத்தில் இச்சிறிய திருவிளக்கு வழிபாடு இன்று மிகப் பெரிய கார்த்திகை தீபத் திருநாளாக திருவண்ணாமலையை மையமாக வைத்துக் கொண்டாடப்படுகின்றது.

**கல்வெட்டுகளில் விளக்கெரிக்கக் கொடைகள்**

தமிழ்நாட்டின் பல்வேறு ஆலயங்களுக்கு நன்கொடைகள் வழங்கப்பட்டதை எண்ணற்ற கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. குறிப்பாக தீப வழிபாட்டிற்காகவும், நாள்தோறும் விளக்கை எரிக்கவும் கொடைகள் வழங்கியதை பல ஆலயங்களில் அமைந்துள்ள கல்வெட்டுகள் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது. இதன் மூலம் தீப வழிபாடு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே வழக்கத்தில் இருந்ததை நம்மால் எளிதில் உணர முடிகிறது.

# கஜ வாகனத்தில் கஜலக்ஷ்மி

கார்த்திகை பிரம்மோற்சவத்தில் ஐந்தாவது நாள் இரவு பத்மாவதி தேவி சுவர்ண கஜ வாகனத்தில் வலம் வருவார். கஜபடத்தை கொடியேற்றுவதின் வாயிலாக தாயாரின் பிரம்மோற்சவங்கள் ஆரம்பமாகின்றன. அலர்மேல் மங்கை வாகன சேவையில் கஜவாகன சேவை முக்கியமானது. வெகுவான பக்தர்கள் கூட்டம் இந்த வாகன சேவையில் கலந்துக் கொண்டு தாயாரின் அருளைப் பெறுவர்!

“வநஸ்த நாத பிரபோதிநிம்” என ஸ்ரீசூக்தம் கஜேந்திரனுக்கும், தாயாருக்குமான நித்ய உறவினை கூறுகின்றது. கஜவர்கத்திற்கு பெருமை சேர்க்கக் கூடியது. நான்கு தந்தங்களைக் கொண்டது ஐராவதம். இது பாற்கடலில் அமுதம் கடைந்த போது லக்ஷ்மி தேவியோடு தோன்றியது. “கஜம் ஐச்வர்யம்” என்பது பதிவு. பாற் கடலில் தோன்றிய அழகே வடிவானத் தாயாருக்கு கஜ ராஜாக்கள் பக்தியோடு அபிஷேகம் செய்தன என ஸ்ரீஸ்துதி வழி எடுத்துச் சொல்வர் – வேதாந்த தேசிகர்.



திசைகளின் பாரத்தை எட்டு திக்கஜங்கள் தாங்குகின்றன. ஆகவே கஜங்களே ஸ்ரீநிவாசனுக்கும், பத்மாவதித் தாயாருக் கும் முதல் முறையாக அறிமுகத்திற்கு காரணமாயின.

“யானைகள் தம் தும்பிக்கையின் மீது தங்கக் குடத்தினை ஏந்தி, ஆகாசகங்கை நதியில் தூய்மையானத் தண்ணீரைக் கொணர்ந்து உலகத்திற்கெல்லாம் தாயாக விளங்கும் அலர்மேல் மங்கைத் தாயாரை அபிஷேகம் செய்கின்றன. உலகத்திற்கெல்லாம் தாய், சர்வலோகங்களுக்கெல்லாம் சுவாமியான விஷ்ணுவிற்கு குடும்பத்தலைவி. அமுதக் கடலின் பிள்ளையான ஸ்ரீதேவியை எந்நேரமும் வணங்குகின்றேன்” என கனகதாரா ஸ்தவத்தில் யானைகளின் வழி அபிஷேகம் பெற்ற உலகத்தாயின் வைபவத்தை சங்கரர் போற்றி வழிபடுவார்.

நீவிரே அனைத்தும் என அடி பணிந்து சரணாகதியைப் பெற்று, முதலை வாயின் பிடியிலிருந்து எம்பெருமான் வேங்கடவனின் அருளினால் காப்பாற்றப்பட்ட கஜேந்திரன் சரணாகதி மார்க்கத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற செய்தியின் விளக்கமே கஜவாகன சேவையின் தத்துவம்.

குறிப்பாக திருவண்ணாமலையில் கிடைத்த எண்ணற்ற கல்வெட்டுகளில் முதலாம் பராந்தக சோழன் காலத்து தொடர் ஆண்டு 922 ஆம் வருடம் கல்வெட்டில் விளக்கு எரிக்க 90 ஆடுகள் தானம் செய்ததைக் குறிப்பிடுகிறது. இது கருவறையின் மேற்கு வெளிச் சுவரில் காணப்படுகிறது. இதே போல, சுந்தர சோழன் என்ற இரண்டாம் பராந்தக னும், அவனது மகனான இரண்டாம் ஆதித்தியனும் இக்கோயிலில் விளக்கு எரிக்க ஆடுகளையும் பொன்னையும் தானமாக அளித்துள்ளானர்.

முதலாம் இராஜாதிராஜன் இக்கோயிலில் விளக்கு எரிக்க 32 பசுக்களையும்,எருது ஒன்றினை யும் கொடுத்தான் என்ற செய்தி திருக்கோயிலில் அமைந்த கல்வெட்டு வாயிலாக அறிய முடிகிறது. இதேபோன்று தமிழ்நாட்டின் எண்ணற்ற திருக் கோயில்களில் விளக்கு எரிக்க, தானங்கள் வழங்கப் பட்ட செய்தி அறிய முடிவதால் தீப வழிபாடு பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு சிறந்து விளங்கி இருந்த தையும், அதை மன்னர்கள் போற்றி தொடர்ந்ததை யும் நம்மால் உணர முடிகிறது.

### அடி முடி தேடிய புராணம்

வானுயர ஓங்கி வளர்ந்த சிவபெருமான் தீப்பிழம்பாக நின்ற போது, அந்த விஸ்வரூப வடிவத் தின் அடியையும், முடியையும் காண முடியாத வண்ணம் இருந்தது. அதன் பின்னர் சிவபெருமான் தன் ஒளி வடிவம் நீக்கி, மலை வடிவமாகக் காட்சி அருளினார். அந்தப் புனிதமான மலை வடிவமே இன்று நாம் தரிசிக்கும் திருவண்ணாமலையாகும். இது அக்னி மலை என்பதை அறிவியல் ஆய்வாளர் களும், புவியியல் ஆய்வாளர்களும் உறுதி செய்துள் ளது இதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

ஒருவரிடம் எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் அவருள் ஆணவம் இருந்தால் அவரால் இறை வனைக் காண இயலாது என்ற தத்துவத்தை உணர்த் தும் விதமாக இந்த நிகழ்வு அமைகின்றது. தூய்மை யான பக்தியினால் மட்டுமே இறைவனை எளிதில் அடைய முடியும் என்ற தத்துவத்தையும் விளக்கு கின்றது. பக்தி சுவை நுனி சொட்ட சொட்ட பாடிய மாணிக்கவாசகர், அண்ணாமலையானைத் தரிசித்த போது, *''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் ஜோதி''* என்று தன் திருவெம்பாவைப் பாடலை தொடங்குகின்றார்.

*''ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள்''* என்று "இறைவனது அடியை முடியும் திருத் தாள்களே" என்று நமக்கு தெளிவு படுத்துகின்றார்.

*''விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய் எண்ணிறந்த எல்லை இலாதனாக''* என எளிதாக சுட்டிக் காட்டுகின்றார்.

### கார்த்திகை மாதமும் சூரியனும்

கார்த்திகை மாதத்தை ராசியின் பெயரால் விருச்சிக மாதம் என்று அழைப்பார்கள். இதில் சூரியன் ஆட்சியில் இருப்பார். இந்த வீடு அனல் கிரகமான செவ்வாயின் வீடாகும். சூரியனையும் இம்மாதத்தில் வழிபாடு செய்வதால் பரம்பரை சொத்துகளால் பயன் உண்டாகும். அவை நம்மை விட்டுப் போகாது. கண் சம்பந்தமான நோய்கள் அணுகாது. பார்வை சக்தி மேம்படும்.

கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் சக்தி மேம்படும். கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியனை வழிபடுவதும், ஜோதி லிங்கங்களை வழிபடுவதும் முதன்மையான புண்ணி யத்தை அளிக்கும். காஞ்சிபுரத்தில் உள்ள ஜோதி லிங்கமான கச்சபேஸ்வரர் பெருமானை வழிபடுவது மிகுந்த பலன் தரும்.

கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திருக் கோயில் சூரிய தீர்த்தத்தில் மூழ்கி அதன் கரையில் உள்ள இஷ்ட லிங்கப் பெருமானையும், கச்சபேசப் பெருமானையும் வழிபட்டால், நினைத்தது நடக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

### கார்த்திகை கோபுரங்கள்

கார்த்திகை தீபம் என்பது மலையின் உச்சியில் ஏற்றப்படும் தீபமாகும். பெரும்பாலான திருக் கோயில்களிலும் கோபுரத்தின் உச்சியில் இதை ஏற்றுவார்கள். என்றாலும், திருவானைக்கோவிலில் உள்ள ஒரு கோபுரத்திற்கும், ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒரு கோபுரத்திற்கும் "கார்த்திகை கோபுரம்" என்ற பெயர் இன்றும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### தீபப்பிரகாசப் பெருமாள்

காஞ்சிபுரத்தில் திருமால் ஜோதி வடிவமாகக் காட்சியளித்து "தீபப்பிரகாசப் பெருமாள்" அதாவது "விளக்கொளிப் பெருமாள்" என்ற திருநாமத்தோடு அருள்புரிந்து வருகிறார்.

தீப தரிசனம் தொடரும்....



# புருஷோத்தமனுக்கு புஷ்ப கைங்கர்யம்

- திருமதி பிரேமா வரதன், புதுடில்லி.



ஸ்ரீ வைகுண்டத்தில் பரமபத நாதன் ஸ்ரீதேவி பூதேவி, நீளாதேவியுடன் வீற்றிருக்க, பெருமாளைப் பார்த்து ஸ்ரீதேவி, ஸ்வாமீ! உமக்கு மிகவும் பிடித்த கைங்கர்யம் என்ன என்று கேட்கிறாள். அதற்கு பகவான் புஷ்ப கைங்கர்யம் என்று கூற, உடனே பூமிப்பிராட்டி பூமாலை சமர்ப்பிக்கும் பாக்யம் பெற நினைத்து, அப்போதே பூலோகம் சென்று, பெரியாழ்வார் திருமகளாய்த் திருத்துழாய்ச் செடியில் அவதரித்து, சூடிக் கொடுத்த நாச்சியாராகிறாள். பூமியிலிருந்து ஆகாசத்தைப் பார்க்கிறாள்.

*"வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்து*
*தேன் கொண்ட மலர் சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்!"*

– நாச்சியார் திருமொழி 8.5

என்று மேகத்திற்கு கட்டளையிட, மேகம் திருவேங்கட மலை மேல் தேன் சிந்தும் மலர்களைப் பொழிந்து கொண்டே இருக்கின்றது. வேங்கட வனுக்கு தோமாலை சேவை நடத்தப்படுகிறது. தோட–மாலை (தோட்ட மாலை) அல்லது தோள் மாலை என்பது தோமாலை என்றாயிற்றென்பர். திருமலைக்குப் புஷ்ப மண்டபம் என்று பெயருண்டு.

யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவன்; யாகத்தின் பயனை அருள்பவன்; யாகத்தின் பயனை அனுபவிக்கக் கூடியவன்; யாக பலத்தைக் கொடுக்கக் கூடியவன்; அப்படிப்பட்டவன் இந்த யாகத்தை ஏற்று, அதிலே தவறு ஏதாவது நடந்து இருந்தாலும், லோபம் இருந்தாலும் மொத்தத் தையும் போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறான் என்பதை ஒரு மந்திரம் எடுத்துக் காட்டுகிறது.

இயற்கையின் சீற்றத்தினால், இப்பூமியில் நாம் செய்யும் பலவித அபசாரங்களினால் பூமா தேவி சீற்றம் கொள்கிறாள், வருந்துகிறாள். அவள் வருத்தத்தையும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக, திருவேங்கடமுடையானுக்கு பிரம்மோற்சவம் முடிந்து புஷ்ப யாகம் செய்யப் படுகிறது. அதில் புஷ்பங்களே யாகமாக கூடை கூடையாக எல்லாவித மலர் களும் ஐந்து டன்களுக்கும் மேலே திருவேங்கடமுடையானுக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். அவன் திருவடியிலும் சேர்ப்பர். திருமுடியிலும் சேர்ப்பர். தேவர்கள் பூமாரிப் பொழிவது போலிருக்கும், தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும். புஷ்ப யாகத்தில் நாம் கலந்துக்கொள்ள இயலவில்லை என்று வருத்தப்படாமல் நம் இல்லத்திலிருக்கும் திருவேங்கடமுடையான் சித்திர படத்திற்கு பூமாலைச் சூட்டி வழிப்பட்டு இறையருளைப் பெறலாமே.

சென்ற இதழின் தொடர்ச்சி...



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே. சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம்:
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

## சக்கரராஜன் திக்விஜயம்

சூதமஹாமுனி! மஹாவிஷ்ணுவின் பஞ்சாயுதங்களில் ஒன்றான சுதர்ஸனாயுதம் வேங்கடாத்ரிக்கு எல்லாத் திசைகளிலும் இருந்த கள்வர்களை அழித்த கதையை எடுத்துக் கூறினீர். ஸ்வாமியின் வீர பராக்கிரம செயல்களை மேலும் கேட்க விரும்புகிறோம். தாங்கள் கருணையோடு எங்களுக்கு விவரிக்க வேண்டும் என்றனர் முனிவர்கள்.

அப்பொழுது சூதர் மிக்க மகிழ்ச்சியோடு “முனிவர்களே! மஹாவிஷ்ணுவின் பஞ்சாயுதங்களில் சுதர்ஸனாயுதம் மிகவும் சிறந்தது. அதற்கு நிகர் வேறொரு ஆயுதம் இல்லை. அந்த சுதர்ஸன சக்கரத்தின் பெருமைகளை எடுத்துக்கூறும் அளவுக்கு எனக்கு சக்தியு மில்லை. இருந்தாலும், நீங்கள் கேட்டதின் காரணமாக எனக்குத் தெரிந்த அளவில் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஸ்வாமி மஹாவிஷ்ணு, சாமானிய மக்களுக்கும், முனிவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கக்கூடிய அயோக்கியர்களை அடக்கும்படி ஆணையிட்டார். ஸ்வாமியின் ஆணைக்கு இணங்க சுதர்ஸனர் அரசன் வேடம் தரித்துப் புறப்பட்டார். ஆயிரம் தோள்களோடு சிகப்பு ஆடையை அணிந்து கொண்டார்.

பிரளய கால ஊழித்தீப் போன்று பயங்கரத் தோற்றம் உடையவராகக் காணப்பட்டார். அவருக்கு துணை யாகக் குமுத, ஜுவாலமுகன் இருவரும் ஆயுதம் தாங்கிய படைகளோடு புறப்பட்டார்கள். சுதர்ஸனன் தன் தேரில் ஏறி சேஷாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வசித்து வந்த சாதுக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கிய கள்ளர் ஒருவரும் இல்லாதவாறு அழித்தார்.

அந்தப் பகுதியில் கள்ளர் பயம் இல்லாமல் செய்தார். அதனால் அப்பகுதி மக்கள் சுதர்ஸனரை சந்தித்தனர்.

மஹாராஜா! இப்பகுதியில் கேட்பதற்கு ஆளில் லாமல் போகவே, கள்வர்கள் இங்கே இடம் ஏற்படுத்திக் கொண்டு சாதாரண மக்களையும், சாதுக்களையும் துன்புறுத்தி வந்தனர். உங்கள் தயவால் எங்களுக்கு அவர்கள் தொல்லை நீங்கியது என்றனர்.

ஆயினும் மஹாராஜா! தாங்கள் யாரென்று எங்க ளுக்குத் தெரியாது. தாங்கள் எங்கிருந்து வந்தீர் என்பதும் தெரியாது. எங்கள் தேவையை அறிந்து எங்கள் துன்பம் துடைத்தீர். தாங்கள் இங்கேயே இருங்கள் எனக் கைக்கூப்பி வேண்டிக் கொண்டனர்.

சுதர்ஸன ராஜன் அவர்களுடைய வேண்டுகோளை அமைதியாகக் கேட்டுக்கொண்டு... “நான் இங்கே இருப்பது என்பது முடியாத காரியம். ஆனால், இங்கு உள்ளவர்களில் ஒருவரை அரசனாக்குகிறேன். அவர் உங்களை எப்பொழுதும் எந்தவொரு துன்பமும் வராதவாறு பாதுகாப்பார் எனச் சொல்லி, அரசனாக




**திருவேங்கடமுடையான் அலர் மேல் மங்கைத் தாயாரை தன் இதயத்தில் வியூக லக்ஷ்மியாக ஆவாஹணம் செய்து கொண்டார். உடனே அவள் "த்வி புஜ வியூக லக்ஷ்மி" என்னும்படி, இரண்டு திருக்கரங்களிலே இரண்டு தாமரை மலர்களை ஏந்தியவளாக, ஸ்வாமியைத் தியானித்து பத்மா சனத்தவளாய் அவர் இதய பீடத்தை அலங்கரித்தாள். அப்படி யாக, "வியூக லக்ஷ்மி"யோடு தன்னுடைய வாசஸ்தலமான ஆனந்த நிலையத்தில் எழுந்தருளுகிறார் திருவேங்கடவன்.**

**"திருச்சான" என்பது "ஸ்ரீகாந்தா" அதாவது மஹா லட்சுமியைக் குறிக்கும். தாமரை மலரில் வீற்று இருக்கும் தாயார் என்பதால் "அலர் மேல் மங்கை" எனவும், ஆயிரம் இதழ்களுடைய தாமரை மலரில் தோன்றியதால் "பத்மாவதி" என்றும் அழைக்கப்படுகிறாள்.**

ஒருவரை நியமித்து அவருக்கான விதிமுறைகளை எடுத்துச் சொல்லி அங்கிருந்து புறப்பட்டார்.

வெவ்வேறு இடங்களிலிருந்து திருமலை வேங்கடாத்ரிக்கு வருகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தும் விதமாக தகுதியுடைய சிலரைத் தலைவர்களாக்கி அவர்களுக்குப் பணி ஒதுக்கீடு செய்தார். மேலும், வெற்றி முரசு முழங்கச் செய்து அங்குள்ள கள்வர்களிடத்தில் அச்சத்தை உண்டாக்கினார். அங்கிருந்த தீயோர்கள் அனைவரையும் அடக்கி அழித்தார். சுதர்ஸன மஹாராஜாவின் தாக்குதலுக்கு ஆளான அவர்கள் அவரிடமிருந்து தப்பித்துச் சென்று தங்கள் தலைவனிடத்தில் நடந்தவற்றினைச் சொல்லி வருந்தினர். அதைக் கேட்டு கோபம் கொண்டு தாக்க வந்த கள்வர் தலைவர்களையும் கந்தர்வ கணங்கள் வெற்றிக் கொண்டார்கள்.

எப்பொழுதும் கண்டும் கேட்டும் அறியாத வகையில் போர் நடந்தது. யானைகளின் பிளிறலும், குதிரைகள் கனைக்கும் ஓசையும், இரதங்கள் ஓடும் சப்தமும் போர்க்களம் முழுவதும் எதிரொலித்தது. அப்பொழுது ஒவ்வொரு வீரரின் செயல் பாடுகளை சுதர்ஸன ராஜாவுக்கு எடுத்துரைத்தார். பின்பு சுதர்ஸன ராஜா தானே விரோதிகளை எதிர் கொள்ளும் முகமாக ஆயிரம் கரங்கள் உடையவராகி எதிரிகளை எதிர்கொண்டார்.

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 100க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | ன் | னை | தி | யா | க | ரா | ய | ந | க | ர் | |
| ன் | 2 பா | 3 தி | ரு | வ | ஹீ | ந் | த் | ர | பு | ர | ம் |
| னை | ஞ் | ரு | | ப | ஷ் | 4 பு | 5 லோ | க | நா | ய | கி |
| பெ | ச | வெ | 6 கு | ங் | கு | மா | ர் | ச் | ச | னை | ய |
| ச | ரா | ள் | மி | லி | | 7 சௌ | யூ | லை | ல் | 8 வா | நா |
| ன் | த் | ள | க்ஷ் | பி | 9 ஸ்ரீ | ந் | றை | மா | வ | ழை | க |
| ட் | ர | க் | ல | ப் | சு | த | ந | சு | கோ | ம | ங் |
| ந | ஆ | கு | ர | 10 ஒ | க | ர் | ரு | கா | ங் | ர | ரெ |
| க | க | ள | 11 வ | | | ய | 12 தி | மி | 13 பூ | ம் | ள |
| ர் | ம | ம் | க | ட | ஷ் | அ | மி | க்ஷ் | ல | ஹா | 14 ம |
| | ம் | வ | ட | ண் | தா | மி | க்ஷ் | 15 ல | | | ரி |
| ணி | ர | க | ஷ் | பு | ர | வ | ரோ | ச | ம | த் | 16 ப |

சுதர்ஸனராஜாவின் போர் வியூகத்தைக் கண்டு எதிரிகள் ஒன்றும் செய்ய முடியாதவர்களாய், தம்மவர்களின் நலனைக் கூட கருத்தில் கொள்ளாமல் புறமுதுகிட்டு ஓடினர்.

சுதர்ஸனன் தீக்கணைகளை ஏவியதால் அந்தத் தீயில் எதிரிகள் எரிந்து கருகி போயினர். அந்தத் தீக்கணைகளின் பிரபாவத்தால் பூமி சூடேறியது. தீக்கணையின் காரணமாக தங்களுடைய வீரர்களும் பாதிக்கப்படுவதை அறிந்த சுதர்ஸனன் உடனே வருணாஸ்திரத்தைப் பிரயோகித்து குளிர்ச்சி அடையச் செய்தார். பிறகு, சுதர்ஸன ராஜா அங்குள்ள "தர்மாத்யக்ஷணனை" ராஜாவாக இருக்கச் செய்து அவருக்கான பணிகளை ஒதுக்கி, இவற்றைச் சரியாக நிர்வகிக்க வேண்டும் எனச் சொல்லி, அங்கிருந்து புறப்பட்டார். அப்பொழுது தன் சேனையைத் தெற்கு திசை நோக்கிச் செல்லுமாறு பணித்தார். காட்டுப் பகுதிகளில் மறைவாக ஓடி ஒளிந்து கொண்டிருந்தவர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்கள் அனைவரையும் அழித்தார்.

தென்திசையில் மிகவும் பலவான்களாக இருந்தவர்களையும், சுதர்ஸன ராஜாவின் பெருமையை அறியாது எளியவராக நினைத்து ஏளனம் பேசிய அனைவரையும் அழித்ததோடு அவர்களின் தலைவனான புளிந்தனனையும் அழித்தார்.

தன் தலைவன் கொல்லப்பட்டதை அறிந்த புளிந்தனனின் படை வீரர்கள் காடுகளில் சென்று ஒளிந்து கொண்டார்கள். காட்டில் மறைந்திருந்த படியே சுதர்ஸனரின் படைகளின் மீது அம்பு மழைப் பொழிந்தனர். சுதர்ஸனரும் அவர்களை அழித்தார். எதிரிகளின் படைகள் அனைத்தினையும் அழித்த பின்னர் தென்திசை முழுவதும் அமைதி நிலவியது.

பெருமை அறிவோம்...

**திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆண்டுக்கு ஒருமுறை கார்த்திகை மாதம் நடைபெறும் பிரம்மோத்ஸவத்தில் ஏழாம் நாள் இரவு சந்திரப்பிரபை வாகனத்தில் எழுந்தருளி அழகாக திருவீதி உலா வருவாள். அந்த வாகனத்தில் தன்னுடைய மணாளனான ஸ்ரீகிருஷ்ணர் அலங்காரத்தில் வலது திருக்கரத்தில் வெண்ணை உருண்டையும், இடது திருக்கரத்தில் வெண்ணை பானையையும் ஏந்தியபடி காட்சியளிப்பாள்.**

**உலா வரும் அருளே வடிவான தாயார், ஐச்வர்யங்களைப் பொழியும் குளிர்ச்சியின் வடிவானவள் என்று சங்கரர் போற்றுகின்றார். தயை என்னும் குளிர்ச்சியான லக்ஷ்மி தேவியின் பார்வை தீமையே வடிவான வெப்பத்தை எப்பொழுதும் நெருங்க விடாமல் தடுத்து, தனமென்னும் வர்ஷத்தைப் பொழிவாயாக என்று சங்கரர் வேண்டி வழிபடுகிறார். தாயாரும் தனது நீர்மை குணத்தை வெளிப்படுத்தி பக்தர்களைக் காத்தருளுவார்.**




**நிலா முகம் கொண்ட அலர்மேல் மங்கைத் தாயாருக்கு சந்திரன் உடன் பிறந்தவனாவான். சந்திரன் குளிர்ச்சியே வடிவானவன். அதனால்தான் பக்தர்கள் பத்மாவதித் தாயாரை சந்திரப் பிரபை வாகனத்தில் தரிசிக்கும்போது உள்ளம் குளிர்ந்து முகத்தில் தெய்வீக ஒளி வீசுகின்றது. சந்திரப் பிரபை வாகனத்தினால், ஆத்யாத்மிக, ஆதிபௌதீக, ஆதி தெய்வீக தாபத்திரயங்கள் விலகி வாழ்வு சுகமாகின்றது.**

**மன நிம்மதிக்கும், மன மகிழ்ச்சிக்கும், சந்திரனே காரணமாவான். இப்பெருமை மிகு குளிர்ந்த சந்திரனை சேவிப்பதினால் மனம் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.**

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளிவருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள் சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக்கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றைச் சரியாகக் குறிப்பிடவும்.
- **"ஸப்தகிரி"** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507" எனும் முகவரியில் அலுவலகப் பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியில் திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்




மேலும் தகவல்களுக்கு **0877-2264543, 2264359**



# தீக்ஷிதர் பார்வையில் திவ்ய நாயகி

– திருமதி எஸ். திருவேணி,
நங்கைநல்லூர்.

தியாகராஜர், முத்துசுவாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி மூவரும் சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப்படுபவர்கள். முத்துசுவாமி தீக்ஷிதர் காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் போன்ற பல கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர். அவரின் பாடல்கள் எல்லாம் ஏறக்குறைய சமஸ்கிருத மொழியிலேயே இயற்றப்பட்டுள்ளன. இவர் சிறந்த வீணை வித்வானாவார். சமஸ்கிருதத்தில் இவர் இயற்றிய நவாவர்ணம், சிவநவா வர்ணம், பஞ்ச லிங்க கிருதிகள், நவகிரஹ கிருதிகள் போன்றவை புகழ் பெற்றவை.

அன்னை மஹாலக்ஷ்மியின் பாடலான ஸ்ரீவரலக்ஷ்மி நமஸ்துப்யம் என அன்னையை அன்புடன் வணங்கித் துவங்கும் பாடல் மிகவும் அற்புதமானது. இவர் வாழ்க்கை முழுவதும் வியப்புகள் பல நிறைந்தது. லக்ஷ்மி தேவியைப் போற்றும் பல பாடல்களில் *"ஹிரண்மையாம் லக்ஷ்மீம்..."* எனத் துவங்கும் பாடல் முத்து சுவாமி தீக்ஷிதரின் இசைக்கு மணிமகுடம் போன்றது. லலிதா ராகத்தில் அமைந்த இப்பாடலில் அற்புதமான பல விஷயங்களை நமக்கு அளித்துள்ளார்.

மஹாலக்ஷ்மியைப் போற்றும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது. நியாயமில்லாமல் இருப்பவர்களிடம் இருந்து நம்மைக் காப்பாற்ற வேண்டுவதாக அமைந்துள்ளது.

க்ஷீர சாஹரம் என்ற பாற்கடலில் அவதரித்து திருமாலின் திருமார்பில் குடி கொண்டிருக்கும் திருமகளான ஸ்ரீமஹாலக்ஷ்மியின் மென்மையான திருப்பாதங்களும், தாமரை தண்டுகள் போன்ற திருக்கரங்களில் மரகத வளையல்களால் அலங்கரித்துக் கொண்டு அத்திருக்கரங்களில் தாமரை மலர்களை ஏந்தியவளாய் மஹாவிஷ்ணுவின் திருமார்பில் வசிப்பவளான தாயார் வேண்டுபவர்களுக்கு வேண்டிய செல்வத்தை அருள்பவள் என விவரிக்கின்றார்.

தாமரை மலரில் இதழ்கள் ஒன்றுடன் ஒன்று சமச்சீராக அமைந்து இருக்கும். அவ்வாறான தாமரையை ஒப்பாக கொண்டு தீக்ஷிதர் பாடிய விதம் அருமை.

தாமரை போன்ற திருக்கரங்கள், அந்தத் திருக்கரங்களில் ஏந்தியுள்ள தாமரை மற்றும் கழுத்தில் தாமரை மலர் மாலையுடன் கூடிய அந்தத் தாயாரை

கமலாம்பிகா என்று தீக்ஷிதர் இந்தப் பாடலில் குறிப்பிடுவது மிகவும் சிறப்பு மிக்கதாக உள்ளது.

அழகான வெள்ளைத் தீவில் சிந்தாமணிகள் நிறைந்த மாளிகையில் அனைத்துக் காலத்திலும் மக்களால் வணங்கப்படும் தெய்வமே மஹாலக்ஷ்மித் தாயார்.

ஸ்வேத தீபம் என்றால் மாசற்ற வெண்மையான தீவு என்று பொருள். சிந்தாமணி என்பது ஆசையை நிறைவேற்றும் இரத்தினம். நினைத்ததும் எது வேண்டுமானாலும் கொடுக்கும் ஒரு மாணிக்கம். ஒரு சிந்தாமணிக்கே அப்பேற்பட்ட சக்தி உண்டு எனில் பலஆயிரக்கணக்கான சிந்தாமணியைக் கொண்டு கட்டிய மாளிகையில் குடியிருப்பவள் அந்த மஹாலக்ஷ்மித் தாயார்.

இவ்வாறாக கடந்தகாலம், நிகழ்காலம், வருங் காலம் என முக்காலங்களிலும் இந்த வெண்மை யானத் தீவில் சிந்தாமணி மாளிகையில் குடி இருக்கும் த்ரிகாலக்ஞான ஸம்பன்னையான ஸ்ரீமஹா லக்ஷ்மியைத் துதிக்கின்றேன் எனப் பாடுகிறார்.

மஞ்சள் பட்டு உடுத்தி, மாணிக்கங்கள் பதித்த ஆபரணங்கள் மற்றும் தாமரை மலர் மாலை அணிந்து, பொன் நிறத்தில் ஜொலிக்கும் அழகிய திருமுகத்தை உடையவளே மஹாலக்ஷ்மி. மஹா விஷ்ணுவின் சகோதரி பார்வதி தேவி. பார்வதியின் மைந்தனே குருகுஹன் எனப்படும் குமார ஸ்வாமி. அந்த விதத்தில் விஷ்ணு குருகுஹனுக்கு மாமன் முறை ஆகிறார். அத்தகைய மஹாவிஷ்ணுவின் இதயக் கமலத்தில் வசிப்பவளும், அவரது பட்டத்து ராணியுமான மஹாலக்ஷ்மித் தாயாரை நான் துதிக்கின்றேன் எனக் கொண்டாடுகிறார்.

மஹாலக்ஷ்மியை கமலாம்பிகை, கிரிஜா, இந்திரா, லலிதா மற்றும் லக்ஷ்மி எனப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளார். திரிசக்தியையும் அவர் ஒரே விதத்தில் நினைத்துப் பாடல்களைப் பாடி உள்ளார்.

அழகு, செல்வம், இரத்தினங்கள், தங்க ஆபரணங்களுடன், சந்திரனைப் போன்ற ஒளிரும் திருமுகத்தினை உடைய திருமகளிடம் இந்த உலக மக்களிடையே உள்ள கெட்ட சஹவாசத்திலிருந்து தன்னை விடுவிக்குமாறு மஹாலக்ஷ்மித் தாயாரிடம் முத்து சுவாமி தீக்ஷிதர் வேண்டுகிறார்.




**திருவேங்கடமுடையான் கைங்கர்யத்திற்கு மற்றும் பிற முக்கியமான தி.தி.தே. ஆலய கைங்கர்யங்களில் உபயோகப்படுத்தப்படும் மலர்களால் ஸ்வாமி சித்திரப்படம் மற்றும் அகர்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன. இவை மிகவும் புனிதமானவை.**

## பஞ்சகவ்ய தயாரிப்புகள் - அகர்பத்திகள்- ஸ்வாமி சித்திரப்படங்கள் விற்கப்படும் இடங்கள்

### திருமலை

**ஸ்ரீவாரி லட்டு கௌண்டர் காம்ப்ளெக்ஸ், ஸ்ரீவாரி ஆலயம் எதிரில், லேபாக்ஷி எம்போரியம் எதிரில், அன்னப்பிரசாதம் காம்ப்ளெக்ஸ்.**

### திருப்பதி

**தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம் எதிரில், கே.டி. சாலை, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம், தியான மந்திரம் (கோவிந்த ராஜ ஸ்வாமி தேர் வீதி), ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலய வளாகம், ஸ்ரீநிவாசம், விஷ்ணு நிவாசம் கட்டிடத் தொகுதிகள், ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலய வளாகம்.**

### திருச்சானூர்

**ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆலய வளாகம்.**

### ஸ்ரீநிவாச மங்காபுரம்

**ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.**





# நவம்பர் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். புதிதாக வீடு, மனை, வாகனங்கள் வாங்கும் யோகமுண்டு.பழைய வாகனங்கள் வாங்க வேண்டாம்.எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.பழைய பாக்கிகள் வசூலாகும்.மனைவி மற்றும் பெற்றோரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழிலில் எதிர்பார்த்த விருத்தியும் முன்னேற்றமும் உண்டு. தொழில் வளர்ச்சிக்கான மாதமிது.

**ரிஷபம்**

உங்கள் ஆரோக்கியத்திற்கான மருத்துவம் கிடைக்கும். உங்கள் மனைவி மற்றும் சகோதரனின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.குழந்தைகள் நல்ல ஆரோக்கியம் பெறுவர். தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். வேலைப்பளு அதிகமாகும். அதற்கேற்ற ஊதியமும் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடும் உழைப்பினால் முன்னேறும் மாதமிது.

**மிதுனம்**

உங்கள் ஆரோக்கியத்திலும், மனைவி, குழந்தைகள் ஆரோக்கியத்திலும் மிகுந்த கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். சகோதரனால் தன லாபம் உண்டு. தந்தையிடம் கருத்து வேற்றுமை ஏற்படும். கடுமையாக முயற்சித்தால் மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். தொழிலில் செலவு அதிகமாகும். மொத்தத்தில் கடுமையாக முயற்சித்தால் முன்னேறும் மாதமிது.

**கடகம்**

உடல்வலி, மூட்டு வலி அதிகமாகும். மனைவி மற்றும் தாயாரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.சிறு பிரச்சனைகளின் பேரில் பூர்வீகச் சொத்துகள் கிடைக்கும். புத்திசாலித்தனமாக காரியத்தை சாதிப்பீர். எல்லா காரியங்களிலும் முதலில் தோல்வியும் மறுமுயற்சியில் வெற்றியும் கிட்டும். கஷ்டப்பட்டு எதிரியை வெல்வீர். கடுமையாக உழைத்தால் மட்டுமே வெற்றி கிட்டும் மாதமிது.

**சிம்மம்**

தொழிலில் மாற்றம் சந்திக்கும் நேரமிது. செலவு அதிகமாகும். திருஷ்டியால் கால தாமதமாகும். மற்றவர்களுடன் பேசும்போது கவனம் தேவை. தம்பதிகளுக்குள் சிறு பூசல் உண்டாகும். தைரியக் குறைவு சிறிது ஏற்படும். தக்க சமயத்தில் உறவினர்களும், நண்பர்களும் உதவுவர். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளால் பாராட்டு கிட்டும். மொத்தத்தில் மாற்றமும், ஏற்றமும் மிக்க மாதமிது.

**கன்னி**

தெய்வ தல யாத்திரையில் நல்ல தரிசனம் பெறுவீர். பெற்றோரால் அனுகூலம் உண்டு. தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். புத்திசாலித்தனமாக செயல்பட்டு காரியத்தை சாதிப்பீர்கள். உங்கள் வாழ்க்கை துணையின் ஆலோசனை பேருதவியாக இருக்கும். விரைவில் பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண் பெறுவர். சகல துறையிலும் வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

எதிலும் வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் அமைதியான சூழல் உண்டாகும்.உங்களுக்கு வயிற்று கோளாறு ஏற்பட்டு சரியாகும். குழந்தைகள் அடம்பிடித்தாலும் நல்ல முன்னேற்றம் பெறுவர். கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் தவிர்க்கவும்.தொழில் விருத்திக்காக கடுமையாக உழைப்பீர். நல்ல வருமானமும் உண்டு. நன்மையும், தீமையும் கலந்த மாதமிது.

**விருச்சிகம்**

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழிலில் அலைச்சல் குறையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.மனைவி நல்ல ஆலோசனை வழங்குவார். தொழில் வளர்ச்சிக்காக நிறைய செலவுகள் செய்வீர். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு காரணமாக மாற்றம் ஏற்படும். செலவிற்கேற்ற வருமானமும் உண்டு. பெரியோரின் ஆதரவு கிட்டும். தெய்வ அருளால் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

கடன் வாங்கும் சூழல் ஏற்படும்.தொழிலில் போட்டி அதிகமாகும். குழந்தைகளின் உடல்நிலை பாதிக்கும். பெற்றோர் ஆரோக்கியத்தோடு இருப்பர். தொழில் வளர்ச்சிக்காக செலவும், அலைச்சலும் அதிகமாகும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்கள் பெறுவர். மனைவிக்காக தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்குவீர்கள். கஷ்டப்பட்டு எதிரிகளை வெல்லும் மாதமிது.

**மகரம்**

குடும்பத்தில் பிறரிடம் பேசும்போது எச்சரிக்கை தேவை. விவாதங்களைத் தவிர்க்கவும். குழந்தைகளால் பெருமைப்படுவீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். பெற்றோரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் நல்ல பேரும் புகழும் கிடைக்கும். பல விதத்திலும் வெற்றி பெறும் மாதமிது.

**கும்பம்**

வேலைப்பளு காரணமாக உடல் வலி அதிகமாகும். தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். பழைய பாக்கிகள் வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டு. மற்றவர்களோடு பேசும்போது விவாதத்தைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பிடிவாதமாக ஏற்றம் பெறும் மாதமிது.

**மீனம்**


சகோதரர்களால் நன்மை உண்டு.வரவிற்கேற்ற செலவு உண்டு. தைரியமாக காரியங்களை செய்து கொள்வீர். குழந்தைகள் நல்ல முன்னேற்றம் பெறுவர். ஆரோக்கியக் குறைபாடு சரியாகும். தொழிற் போட்டியில் வெற்றி கிட்டும். அலைச்சலால் தூக்கம் குறையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். உழைப்பிற்கேற்ற ஊதியமும், ஊதியத்திற்கேற்ற செலவும் உண்டாகும் மாதமிது.

# சிறுவர் உலகம்

## பல்சுவை பகுதி

### சித்திரப் பகுதி


எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்





படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!







மேலே குறிப்பிடப்பட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் தகுந்த எண்களை எழுதுங்கள்

1) கார்த்திகை மாதத்திற்கு தொடர்புடையவை
2) குழந்தைகள் தினம் தொடர்புடையவை
3) தாயாரின் வாகன சேவையுடன் தொடர்புடையவை

### பாதையைக் கண்டுபிடி

கீழே உள்ள சிறுவன் ஐஸ்க்ரீம் சாப்பிட வழிகாட்டி உதவுங்கள். கணித விடைகள் 11 என்ற எண்ணிக்கையில் வரும் கட்டங்களை மட்டும் இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 +1 | 18 −2 | 9 −1 | 5 +6 | 23 −12 | 55 −44 | 17 +5 | 28 −5 |
| 12 −1 | 7 +2 | 35 −10 | 35 −24 | 14 −13 | 72 −61 | 50 −38 | 21 −2 |
| 22 −11 | 2 +9 | 10 −2 | 3 +8 | 35 −20 | 26 −15 | 1 +9 | 40 −2 |
| 7 +2 | 4 +7 | 31 −20 | 43 −32 | 12 −12 | 45 −34 | 8 +3 | 0 +11 |

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திச்சூடி"யைப் படிப்போமா!

சோர்வு சொல் படேல், திரியேல் சோம்பித், எனத் தக்கோன் திரி, விரும்பு தானமது, அடிமை திருமாலுக்கு செய், அகற்று தீவினை.

சொல் சோர்வு படேல், சோம்பித் திரியேல், தக்கோன் எனத் திரி, தானமது விரும்பு, திருமாலுக்கு அடிமை செய், தீவினை அகற்று.

# வினாடி வினா



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-28

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் அவதரித்த திதி ..............................................................
2. முதல் திருவந்தாதியைப் பாடிய ஆழ்வார் ..............................................................
3. பிராட்டிக்கும் திருப்பல்லாண்டு பாடிய ஆழ்வார்..............................................................
4. திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித்தாயாருக்கு திருப்பவித்ரோத்ஸவம் நடைபெறும் மாதம்...................................
5. ஸ்ரீகிருஷ்ணர் மணம் புரிந்த ஸத்ராஜித்தின் திருமகள் ..............................................................
6. துளசியை யாருடைய அம்சமாகக் கூறுவர்..............................................................
7. பாற்கடல், யாகபூமி, திருக்குளம் என இவற்றில் அவதரித்தவர்..............................................................
8. திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித்தாயார் அவதரித்த தமிழ் மாதம்..............................................................
9. சென்னையில் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு திருக்கோயில் அமைந்துள்ள இடம்.........................................
10. திருச்சானூர் பிரம்மோத்ஸவத்தின் ஆறாம் நாள் மாலை நடைபெறும் உற்ஸவம்.........................................
11. சத்யபாமாவிற்காக ஸ்ரீகிருஷ்ணர் தேவலோகத்தில் இருந்து கொண்டு வந்தது.........................................
12. திருமலையில் ஸ்ரீநிவாசனின் பசியைப்போக்கிடபசுவாகவும், கன்றாகவும் வந்தவர்கள் ...............................
13. பாற்கடலில் அமிர்த கலசத்துடன் அவதரித்தவர்..............................................................
14. கொல்ஹாபூரில் அருளாட்சிப் புரியும் தாயார்..............................................................
15. திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் அவதரித்த நட்சத்திரம்..............................................................

### வினாடி வினா போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.11.2024.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**



## சக்கரத்தைச் சுற்றுங்கள்!

## அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



- திருச்சானூரில் பிரம்மோத்ஸவம் நடைபெறும் தமிழ் மாதம்
- திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் தாயார் திருநாமம்
- திருச்சானூரில் உள்ள குளத்தின் பெயர்
- பத்மாவதித் தாயார் ஆவிர்பவித்த மலர்
- பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாளில் நடைபெறும் தீர்த்தத்தின் பெயர்
- பிரம்மோத்ஸவத்தில் 5ஆம் நாள் இரவு நடைபெறும் வாகனம்
- பிரம்மோத்ஸவத்திற்கு மறுநாள் நடைபெறும் யாகம்
- திருவேங்கடவனின் பட்டத்து ராணி



**விடைகள்**

1) கார்த்திகை, 2)ஸ்ரீபத்மாவதித் தாயார் , 3)பத்மசரோவரம், 4)தாமரை, 5) பஞ்சமி தீர்த்தம், 6) யானை வாகனம், 7)புஷ்ப யாகம், 8)ஸ்ரீபத்மாவதித்தாயார்

## படத்தைப் பார்ப்போம்! பெயரைக் கண்டுபிடிப்போம்!!









**விடைகள்**

1) அலர்+மேல்+மங்கை = அலர்மேல்மங்கை

2) பொய்கை+ஆழ்வார் = பொய்கையாழ்வார்



## பாரதியாரின் பொன்மொழி வாழ்க்கையின் வழிகாட்டி



*யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடி தமிழ் மொழிக்கு ஏற்றம் கொடுத்த கவிஞர் மகாகவி பாரதியார். அவர் பொன்மொழிகள் சிறார்களுக்கு வழிகாட்டி. அவற்றில் சில...*

**மனித முயற்சிகளில் தவறு என்பது இயல்புதான். அதை திருத்திக் கொள்வது தான் மனித அழகு.**

**சிறார்களே! நாம் அறியாமல் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொண்டு பாரதி கூறியபடி நல்வழியில் பயணிப்போம்...**

*- டாக்டர். கவிஞர் இரா.உமா பாரதி, மகாகவி பாரதியார் வம்சாவளி, சென்னை.*

# சாபமே வரம்

சித்திரக் கதை

கதை மூலம் : டாக்டர் கே. ரவிச்சந்திரன்.
சித்திரம் :திரு. து.சிவாஜி.





அப்போது தௌம்ய மகரிஷி அங்கு வந்தார்.
மகரிஷியை வணங்குகிறோம்.
தர்மா! விதி வலியது! நடந்தவற்றை எண்ணி கலங்காதே. வெற்றியோடு அக்ஞாத வாசத்தை நிறைவு செய்திடுங்கள். முக்கியமாக திரௌபதியைக் கவனமுடன் பாதுகாத்திடுங்கள்.
பாண்டவர்கள் விராட நகரத்தின் அருகாமைக்கு வந்தனர்.
அர்ஜுனா! உன் காண்டீவம் அனைவருக்கும் தெரியும். எனவே எவராவது கவனித்து அடையாளம் கண்டுபிடித்துவிட்டால் நாம் மீண்டும் வனவாசம் செல்ல வேண்டி வரும். ஆதலால் நம் ஆயுதங்களை பாதுகாப்பாக மறைத்து வைத்து விடுவது நல்லது.
அர்ஜுனன் மனித நடமாற்றமற்ற ஒரு மயானத்திற்கு அருகில் இருந்த வன்னி மரத்தில் தன் ஆயுதங்களை பிணம் போன்று மூட்டையாகக் கட்டி வைத்தான்.
மகாராஜா! நான் சங்கீதமும் நாட்டியமும் தெரிந்தவள். என் பெயர் பிருஹன்னளை. தாங்கள் அனுமதி தந்தால் அரண்மனையில் சிறிது காலம் தங்கி அரண்மனைப் பெண்களுக்கு நடனக் கல்வியைக் கற்றுத் தருகிறேன்.
பிருஹன்னளை... உன் விருப்பப்படியே அரண்மனையில் தங்கியிருந்து என் மகளுக்கு நடனத்தைக் கற்றுக்கொடு.
அண்ணா! நம் அர்ஜுனன் ஊர்வசியின் சாபத்தையே வரமாக மாற்றிக் கொண்டு விஜயன் எனும் பெயருக்கு உரியவனானான்.
ஆமாம் பீமசேனா! நல்வார்த்தைக் கூறினாய். சரி... நீ செல். யாராவது பார்த்தால் ஆபத்து. நமக்கு அந்த கிருஷ்ண பரமாத்மாவின் தயவால் எப்பொழுதும் துன்பங்கள் விலகிடும்.


சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐கன்னடம் ☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

**மேலும் தகவல்களுக்கு
0877- 2264543,
2264359**


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

**04-10-2024 முதல் 12-10-2024 வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். மற்றும் பல்வேறு வாகன சேவைகளில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜீயர் சுவாமிகளுடன் திவ்வியப்பிரபந்த கோஷ்டியினர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர், இணைச்செயலாட்சித்தலைவர்கள், கலைக்குழுவினர் மற்றும் பக்தகோடிகள்**








SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY, Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 25-10-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

